# முதலாம் பருவம்

## இயல் 1 — 1. வாழ்த்து — செய்யுட்பகுதி

### மனப்பாடப்பகுதி

முத்தே பவளமே மொய்த்தபசும் பொற்சுடரே
சித்தேஎன் னுள்ளத் தெளிவே பராபரமே
கண்ணே கருத்தேயென் கற்பகமே கண்ணிறைந்த
விண்ணே ஆனந்த வியப்பே பராபரமே.

- தாயுமானவர்

### அ. புறவயவினாக்கள்

**1. பொருள் எழுதுக:-**

1. சுடர் - ----------
2. ஆனந்தம் - -------------
3. பராபரம் - -------------

விடைகள்

1. ஒளி
2. மகிழ்ச்சி
3. மேலான பொருள்

**2. பிரித்து எழுதுக.**

1. பசும்பொற்சுடர் - ----------------
2. கண்ணிறைந்த - ----------------

1. பசுமை + பொன் + சுடர்
2. கண் + நிறைந்த

**3. சேர்த்து எழுதுக:-**

1. என் + உள்ளம் - ---------------
2. பெருமை +அறிவு - ----------

1. என்னுள்ளம்
2. பேரறிவு

**4. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. வாழ்த்துப் பாடல் இடம்பெற்றுள்ள நூல் ---------------
2. தாயுமானவர் பிறந்த ஊர் ---------------

1. தாயுமானவர் திருப்பாடல் திரட்டு
2. திருமறைக்காடு

### ஆ) குறுவினா

**1. தாயுமானவர் -குறிப்பு எழுதுக.**

1. தாயுமானவர் நாகப்பட்டினம் மாவட்டம் திருமறைக்காட்டில் பிறந்தவர்.
2. தாயுமானவரின் பெற்றோர் பெயர் கேடிலியப்பர் - கெசவல்லிஅம்மையார்
3. இவர் திருச்சியை ஆண்ட விசய ரகுநாத சொக்கலிங்கரிடம் கருவூலஅலுவலராகப் பணியாற்றினார்.
4. தாயுமானவரின் காலம் கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டு ஆகும்.

### இ. சிறுவினா

**1. இறைவன், தாயுமானவருக்கு எவ்வாறு காட்சியளிக்கிறார்?**

1. பிறர் முகத்தைப் பார்த்து அவரின் இயல்பை முகக்குறிப்பினால் உணரும் கண்ணாய் காட்சியளிக்கிறார்.
2. கேட்டதைத் தந்தருளும் கற்பகமரமாய்க் காட்சியளிக்கிறார்.
3. கண்ணில் முழுமையாக நிறைந்த விண்ணாகக் காட்சியளிக்கிறார்.
4. மகிழ்ச்சியில் தோன்றும் வியப்பாய் காட்சியளிக்கிறார்.

### கூடுதல் வினாக்கள்

**2. இறைவனைத் தாயுமானவர் எவ்வாறு வாழ்த்துகிறார்?**

இறைவனைத் தாயுமானவர் முத்தே, பவளமே, பொன்னொளியே, பேரறிவே, உள்ளத்தெளிவே, கண்ணே, கருத்தே, கற்பகமே, விண்ணே, ஆனந்த வியப்பே, மேலான பொருளே என வாழ்த்துகிறார்.

**3. இறைவன் எவ்வாறெல்லாம் விளங்குவதாகத் தாயுமானவர் குறிப்பிடுகிறார்?**

1. இறைவனை தாயுமானவர் மேலான பரம்பொருளாயும், முத்தாகவும், பவளமாகவும், தூய பொன்னொளியாகவும், பேரறிவாகவும், உள்ளத் தெளிவாயும் இருக்கின்றாய்.
2. கண்ணாகவும், என் கருத்தாகவும் விரும்பியதையெல்லாம் வழங்கும் கற்பக மரமாகவும், கண்ணிறைந்த விண்ணாயும், மகிழ்ச்சியில் தோன்றும் வியப்பாகவும் விளங்குவதாய்த் தாயுமானவர் குறிப்பிடுகிறார்.

## இயல் 1 — 2. திருக்குறள் — செய்யுட்பகுதி

### நட்பு

### மனப்பாடப் பாடல்கள்

1. நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
   பின்நீர பேதையார் நட்பு.
2. நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
   பண்புடை யாளர் தொடர்பு.
3. புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
   நட்பாங் கிழமை தரும்.
4. முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து
   அகநக நட்பது நட்பு.
5. உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
   இடுக்கண் களைவதாம் நட்பு.

### அ) புறவயவினாக்கள்

**1. பொருள் எழுதுக:-**

| | | விடைகள் |
|---|---|---|
| 1. கேண்மை | - ---------------- | **1. நட்பு** |
| 2. உடுக்கை | - ---------------- | **2. ஆடை** |
| 3. அல்லல் | - ---------------- | **3. துன்பம்** |
| 4. கிழமை | - ---------------- | **4. உரிமை** |
| 5. நகுதல் | - ----------------- | **5. சிரித்தல்** |
| 6. இடுக்கண் | - ---------------- | **6. துன்பம்** |

**2. பிரித்து எழுதுக**

| | | |
|---|---|---|
| 1. செயற்கரிய | - ------------------ | **1. செயற்கு + அரிய** |
| 2. நட்பன்று | - ----------------- | **2. நட்பு + அன்று** |
| 3. பொருட்டன்று | - ----------------- | **3. பொருட்டு + அன்று** |
| 4. ஆறுய்த்து | - ------------------ | **4. ஆறு + உய்த்து.** |

**3. கோடிட்ட இடங்களை நிரப்புக**

1. திருக்குறள் ----------------- நூல்களுள் ஒன்று. — **1. பதினெண்கீழ்க்கணக்கு**
2. திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் ------------------ — **2. ஜி.யு போப்**
3. திருக்குறளின் பெருமையை விளக்கும் நூல் ------------------ — **3. திருவள்ளுவமாலை**
4. முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து
   அகநக ------------------ நட்பு — **4. நட்பது**
5. நிறைநீர நீரவர் கேண்மை
   இத்தொடரில் நட்பு எனும் பொருள் தரும் சொல் ----------------- — **5. கேண்மை**

**4. பொருளுணர்ந்து பொருத்துக:-**

| | | விடைகள் |
|---|---|---|
| 1. பேதையார் நட்பு | - உடுக்கை இழந்தவர் கை போன்றது. | **- தேய்பிறை போன்றது.** |
| 2. பண்புடையாளர் தொடர்பு | - வளர்பிறை போன்றது. | **- நவில்தொறும் நூல்நயம் போன்றது.** |
| 3. அறிவுடையார் நட்பு | - நவில்தொறும் நூல்நயம் போன்றது. | **- வளர்பிறை போன்றது.** |
| 4. இடுக்கண் களையும் நட்பு | - தேய்பிறை போன்றது | **- உடுக்கை இழந்தவர் கை போன்றது.** |

### ஆ) குறுவினாக்கள்

**1. உலகப்பொதுமறை எனத் திருக்குறள் அழைக்கப்படுவது ஏன்?**

நாடு, மொழி, இனம், சமயம் வேறுபாடு இல்லாமல் எக்காலத்திற்கும் பொருந்துவதாக கருத்துக்களைக் கூறுவதால் திருக்குறள் "உலகப்பொதுமறை" எனப் போற்றப்படுகிறது.

**2. திருவள்ளுவருக்கு வழங்கும் வேறு பெயர்கள் யாவை?**

1. நாயனார் 2. தேவர் 3. முதற்பாவலர் 4. தெய்வப்புலவர்
5. பொய்யில்புலவர் 6. பெருநாவலர் 7. செந்நாப்போதார் 8. மாதானுபங்கி

**3. அறிவுடையார் நட்பு எதனைப் போன்றது?**
அறிவுடையார் நட்பு பிறைச்சந்திரன் போன்றது. பிறைச்சந்திரன் நாளுக்கு நாள் வளர்வதுபோல், அறிவுடையார் தம்முள் செய்துகொண்ட நட்பு நாள்தோறும் வளரும் தன்மையது.

**4. பண்புடையாளர் தொடர்பு எத்தன்மையது?**
நல்ல நூல்களின் பொருள் உள்ளத்தில் புதுமையாய்த் தோன்றி இன்பத்தைத் தரும். அதுபோன்று நற்குணமுள்ள பண்புடையாரின் நட்பு, பழகப்பழக அவர்களுக்குள் வளர்ந்து இன்பத்தைத் தரும்.

5. **'உடுக்கை இழந்தவன் கைபோல' இவ்வுவமையைப் பொருளோடு பொருத்துக.**
**உவமை :-**
ஒருவனுக்கு உடுத்திய ஆடை நெகிழ்ந்தபோது கை உடனே சென்று பற்றி மானம் காக்கும்.
**உவமேயம்** :-
நண்பனுக்குத் தீங்கு நேர்ந்தபோது விரைந்து சென்று உதவுதல்.
**உவமஉருபு** :- போல
**விளக்கம் :-**
உடுத்திய ஆடை நழுவும் போது அவமானம் நேராதபடி, விரைந்து செயல்பட்டு நெகிழ்ந்த ஆடையைப் பற்றும் கைபோல, நண்பனுக்குத் துன்பம் ஏற்பட்டபோது விரைந்து சென்று உதவுவதே சிறந்த நட்பாகும் என்பதாம்.

**6. நட்புக்கு சிறந்த இடம் எது?**
எப்போதும் வேறுபடுதல் இல்லாமல், இயலும் பொழுதெல்லாம் நண்பனுக்கு உதவி செய்து தாங்குதலேயாகும்.

7. **எது கீழான நட்பு? (அல்லது) நட்பு எப்போது சிறப்பிழக்கும்?**
இவர், நமக்கு இவ்வளவு அன்புடையவர் என்றோ, நாம் இவர்க்கு இத்துணைச் சிறப்புடையவர் எனப் புகழ்ந்துரைக்கக் கூடாது. அவ்வாறு புகழ்ந்துரைத்தால் அது கீழான நட்பாகும்.

## இ) சிறுவினாக்கள்

**1. திருக்குறளுக்கு வழங்கும் வேறு பெயர்கள் யாவை?**
**திருக்குறளுக்கு வழங்கும் வேறு பெயர்கள் :-**

| | | | |
|---|---|---|---|
| 1. முப்பால் | 2. உத்தரவேதம் | 3. தெய்வநூல் | 4. திருவள்ளுவர் |
| 5. பொய்யாமொழி | 6. வாயுறைவாழ்த்து | 7. தமிழ்மறை | 8. பொதுமறை |

**2. பாரதியும், பாரதிதாசனும் திருவள்ளுவரை எவ்வாறு சிறப்பித்துள்ளனர்?**
1. **பாரதியார்**: வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு – என்றும்,
2. **பாரதிதாசன்**: வள்ளுவனைப் பெற்றதால் பெற்றதே
புகழ் வையகமே - என்றும் திருவள்ளுவரைச் சிறப்பித்துக் கூறியுள்ளனர்.

**3. நட்பைப் போன்ற சிறந்த பாதுகாப்பு வேறில்லை என வள்ளுவர் கூறக்காரணம் யாது?**
**நட்பைப் போன்ற சிறந்த பாதுகாப்பு வேறில்லை என வள்ளுவர் கூறக்காரணம்**:
1. நட்புச்செய்தற்குத் தகுதியுடையவரைப் பெறுதல்
2. தகுதியுடையவரைப் பெற்றால் அவரைக்கொண்டு செய்யும் உபாயம்,
3. நட்பில் மாறுதல் இன்றி நிலைத்து நிற்றல் முதலிய அரிய செயல்களால் நட்பைப் போன்ற சிறந்த பாதுகாப்பு வேறில்லை என்று வள்ளுவர் கூறுகிறார்.

**4. 'புணர்ச்சி பழகுதல் வேண்டா' என வள்ளுவர் கூறுவது ஏன்?**
**புணர்ச்சி பழகுதல் வேண்டா என வள்ளுவர் கூறக் காரணம்:**
1. நட்பில் அன்பு பெருகுதல் உண்டு. ஆதலால் நட்பு பெருகுதலும் உண்டு.
2. இந்நட்புகள் ஏதேனும் ஒரு காரணம் பற்றி இடையில் விட்டுப்போதல் உண்டு.
3. ஆனால் இருவர்க்கும் உணர்ச்சி ஒத்திருப்பின் அந்நட்பு எக்காலத்தும் விட்டு நீங்குவதில்லை.
4. எனவே, புணர்ச்சி, பழகுதல் ஆகிய இரண்டினும் மேம்பட்டது ஒத்த உணர்ச்சியே ஆகும்.
5. ஆதலால் வள்ளுவர், "புணர்ச்சி பழகுதல் வேண்டா" என்றார்.

## ஈ) நெடுவினா

**1. நட்பு என்னும் அதிகாரத்தில் வள்ளுவர் கூறியுள்ள கருத்துகளைத் தொகுத்து எழுதுக.**

| |
|---|
| **1. நட்பின் சிறப்பு** |
| **2. நட்பின் சிறப்பிற்குக் காரணங்கள்** |
| **3. நட்பின் பயன்** |
| **4. நட்பின் ஒத்த மனவுணர்வு** |
| **5. நட்பிற்கு இலக்கணம்** |

**1. நட்பின் சிறப்பு :-**
நட்பைப்போலச் செய்துக்கொள்வதற்கரிய அரிய உறவுகள் எவையும் இல்லை. பகைவர் செய்யும் செயலுக்கு அரிய காவலாய் இருப்பவையும் வேறு எவையும் இல்லை.

**2. நட்பின் சிறப்பிற்குக் காரணங்கள் :-**
1. அறிவுடையவர்களின் நட்பு, வளர்பிறைபோல நாள்தோறும் வளரும்.
2. அறிவில்லாதவர்களின் நட்பு, முழுமதி நாளுக்கு நாள் தேய்வதுபோல்,முடிவில் அழியும்.
3. நல்ல நூல்களில் உள்ள அரிய கருத்துக்கள் கற்க கற்க இன்பம் தருதல் போலப் பண்புடையாரின் நட்பு பழகப் பழக இன்பந்தரும்.

**3. நட்பின் பயன் :-**
நட்பு என்பது சிரித்துப் பேசி மகிழ்வதற்கு மட்டுமன்று; நண்பரிடத்தில் தவறு ஏதேனும் காணப்பட்டால் அவரைக் கடிந்துரைத்துத் திருத்தி நல்வழிப்படுத்துதல் ஆகும்.

**4. நட்பின் ஒத்த மனவுணர்வு :-**
1. நட்பில் இருவருக்குமிடையே நட்பு நிலைப்பதற்கு ஒரே இடத்தில் சேர்ந்திருத்தலும், நெருங்கிப் பழகுதலும் தேவையில்லை.
2. ஒத்த மனவுணர்வே நட்புரிமையைக் கொடுக்கும்.

**5. நட்பிற்கு இலக்கணம் :-**
1. முகம் மட்டும் மலரும்படி நட்புக்கொள்வது நட்பாகாது. உள்ளமும் மகிழும்படி நட்புக்கொள்வதே நல்ல நட்பாகும்.
2. ஆடையானது நழுவும் போது விரைந்து கை பற்றி மானம் காப்பது போல், துன்பம் ஏற்பட்ட போது விரைந்து நண்பனைக் காப்பதே சிறந்த நட்பாகும்.
3. நண்பனைத் தீய வழியிலிருந்து நல்வழிப்படுத்துதல். அழிவு நேரும்போது உடனிருந்து தானும் பங்கேற்று, அழிவிலிருந்து மீட்க வேண்டும்.
4. எப்பொழுதும் மாறுபாடு இல்லாமல், இயன்ற அளவு உதவி செய்து தாங்குதல், எமக்கு இத்தகு அன்பினர் என்றோ, நாம் இவ்வளவு அன்புடையோம், என்று அழகுபடக்கூறினும் அந்நட்பு சிறப்பிழக்கும்.

### கூடுதல் வினாக்கள்

**1. திருக்குறளின் அமைப்புக் குறித்து எழுதுக.**
1. திருக்குறள் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என மூன்று பிரிவுகளையுடையது.
2. அறத்துப்பால் - மூன்று இயல்களையும், பொருட்பால் - மூன்று இயல்களையும், காமத்துப்பால் - இரு இயல்களையும் கொண்டது.
3. பாலின் உட்பிரிவு இயல் எனப்படும். இயலின் உட்பிரிவு அதிகாரம் எனப்படும்.
4. அதிகாரத்திற்குப் பத்துப் பாடல்கள் வீதம் 133 அதிகாரங்களில் 1330 பாடல்களைக் கொண்டுள்ளது.

## இயல் 1 | 3. தமிழ் வளர்த்த சான்றோர்கள் | உரைநடைப்பகுதி

### அ) புறவயவினாக்கள்

**1. பிரித்து எழுதுக.** — விடைகள்

| | | |
|---|---|---|
| 1. செந்தமிழ் | - ------------- | **1. செம்மை + தமிழ்** |
| 2. பேச்சுக்கலை | - ------------- | **2. பேச்சு + கலை** |
| 3. புத்துயிரூட்டி | - -------------- | **3. புத்துயிர் + ஊட்டி** |
| 4. சதுரகராதி | - -------------- | **4. சதுர் + அகராதி** |

**2. சேர்த்து எழுதுக.**

| | | |
|---|---|---|
| 1. புகழ் + ஆரம் | - -------------- | **1. புகழாரம்** |
| 2. நம் + தமிழ் | - -------------- | **2. நந்தமிழ்** |
| 3. பெருமை + இன்பம் | - -------------- | **3. பேரின்பம்** |
| 4. நன்மை + நூல் | - -------------- | **4. நன்னூல்** |

**3. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

| | |
|---|---|
| 1. புதுக்கவிதைக்கு வித்திட்டவர் ----------------- | **1. பாரதியார்** |
| 2. வீரமாமுனிவரின் இயற்பெயர் ------------------ | **2. கான்ஸ்டாண்டின் ஜோசப் பெஸ்கி** |
| 3. ஆறுமுக நாவலரை, ‘வசனநடை கைவந்த வல்லாளர்’ எனப் பாராட்டியவர் -------------------- | **3. பரிதிமாற்கலைஞர்** |

### ஆ) குறுவினாக்கள்

**1. தமிழுக்குத் தொண்டாற்றிய தமிழறிஞர் நால்வரின் பெயர்களை எழுதுக.**
**தமிழுக்குத் தொண்டாற்றிய தமிழறிஞர்கள் :-**

1. பாரதியார் 2. பாரதிதாசன் 3. மறைமலை அடிகள் 4. திரு.வி.கலியாணசுந்தரனார் ஆகிய நால்வரும் தமிழுக்குத் தொண்டாற்றிய தமிழறிஞர்கள் ஆவர்.

**2. வீரமாமுனிவர் அறிந்திருந்த மொழிகள் யாவை?**
**வீரமாமுனிவர் அறிந்திருந்த மொழிகள் :-**

1. வீரமாமுனிவர் ஆங்கிலம், எபிரேயம், கிரேக்கம், ஆகிய மொழிகளை அறிந்திருந்தார்.
2. தமிழ், தெலுங்கு, வடமொழி ஆகிய மொழிகளையும் கற்றுத்தேர்ந்தார்.

**3. குணங்குடி மஸ்தான் சாகிபு இயற்றிய நூல்களைக் குறிப்பிடுக.**
பராபரக்கண்ணி, எக்காலக்கண்ணி, மனோன்மணிக்கண்ணி, நந்தீசுவரக்கண்ணி.

### இ) சிறுவினாக்கள்

**1. வீரமாமுனிவர் குறித்து ரா.பி.சேதுப்பிள்ளை கூறியது யாது?**
**வீரமாமுனிவர் குறித்து ரா.பி.சேதுப்பிள்ளைக் கருத்து :-**

1. "தேம்பாவணி, காவலூர்க் கலம்பகம் ஆகியன கதம்பமாலையாய்க் காட்சியளிக்கின்றன.
2. தொன்னூல் பொன் நூலாக இலங்குகின்றது; சதுரகராதி முத்தாரமாய் மிளிர்கின்றது.
   வீரமாமுனிவர் தமிழ் முனிவர்களுள் ஒருவராக விளங்குகின்றார்" எனச் சொல்லின் செல்வர் ரா.பி.சேதுப்பிள்ளை வீரமாமுனிவருக்குப் புகழாரம் சூட்டினார்.

**2. ஆறுமுக நாவலர் பதிப்பித்த நூல்கள் யாவை?**
**ஆறுமுக நாவலர் பதிப்பித்த நூல்கள் :-**

1. ஆறுமுக நாவலர் சிறந்த தமிழ்நூல்களைப் பதிப்பித்தார்.
2. பாரதம், பெரியபுராணம், கந்தபுராணம், திருக்குறள் பரிமேலழகர் உரை, இலக்கண வினாவிடை, இலக்கணச் சுருக்கம், நன்னூல் விருத்தியுரை, நன்னூல் காண்டிகையுரை, இலக்கணக்கொத்து, இலக்கணச் சூறாவளி, ஆகிய நூல்களைத் தம் அச்சுக்கூடத்தின் வாயிலாகப் பதிப்பித்தார்.

### ஈ) நெடுவினா

**1. வீரமாமுனிவர் தமிழுக்கு ஆற்றிய தொண்டுகள் யாவை?**
**வீரமாமுனிவர் தமிழுக்கு ஆற்றிய தொண்டுகள் :-**

1. வீரமாமுனிவர் தமிழ்மொழியின் மீது கொண்ட பற்றினால் 'தைரியநாதர்' என முதலில் சூட்டிக்கொண்ட தம் பெயரைத் தனித்தமிழாக்கி 'வீரமாமுனிவர்' என சூட்டிக்கொண்டார்.
2. வீரமாமுனிவர் தமிழுக்கு ஆற்றிய தொண்டுகள் பலவாகும். தமிழில் முதன்முதலாகச் சதுரகராதி என்னும் அகரமுதலியை வெளியிட்டார்.
3. 'தேம்பாவணி' என்னும் கிறித்தவக்காப்பியத்தை இயற்றினார்.
4. தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தை மேற்கொண்டார்.
5. தொன்னூல் விளக்கம் என்னும் இலக்கண நூலைப் படைத்தார்.
6. கலம்பகம், அம்மானை முதலிய சிற்றிலக்கியங்களை இயற்றினார்.
7. பரமார்த்தகுரு கதை என்னும் நகைச்சுவை நூலை எழுதினார்.

## இயல் 1 — 4. ஜி.யு.போப் — துணைப்பாடப் பகுதி

**நெடுவினா:** 1. ஜி.யு.போப் அவர்களின் தமிழ்த்தொண்டினை விவரிக்க.

1. முன்னுரை.
2. தமிழகத்தில் சமயப்பணி
3. தமிழ் இலக்கிய ஆர்வம்.
4. தமிழ்ச்செய்யுட் கலம்பகம்
5. பாடநூலின் முன்னோடி
   அ) இயற்றிய இலக்கண நூல்கள்
   ஆ) இயற்றிய அகராதி நூல்கள்
6. மொழிபெயர்ப்பு நூல்கள்
7. முடிவுரை

1. **முன்னுரை :**
இளமையிலேயே விடாமுயற்சி, சுறுசுறுப்பு, ஊக்கம், உழைப்பு இவற்றில் மேம்பட்டுத் திகழ்ந்தவர் ஜி.யு.போப் என்றழைக்கப்படும் **'ஜியார்ஜ் யுக்ளோ போப்'** ஆவார். இவர் **கி.பி.1820** - ல் பிறந்தார். தமிழ் மொழியில் பல நூல்களைக் கற்றுத் தேர்ந்தவர். தமிழுக்கு அவர் ஆற்றிய பணிகளை அறிவோம்.

2. **தமிழகத்தில் சமயப்பணி:**
   1. ஜி.யு. போப் தன் பத்தொன்பதாம் வயதில் தமிழகத்தில் சமயப்பணியாற்றத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
   2. தமிழகம் வந்த ஐரோப்பியர்களுள் சமயப்பணியோடு தமிழ்ப்பணியையும் ஆற்றி அழியாப்புகழ் பெற்றுள்ள சான்றோர், தவத்திரு ஜி.யு.போப் ஆவார்.
   3. திருநெல்வேலி மாவட்டம் சாயர்புரத்தில் 1842 முதல் 1849ஆம் ஆண்டுவரை கல்விப்பணியும் சமயப்பணியும் ஆற்றினார்.

3. **தமிழ் இலக்கிய ஆர்வம் :**
   1. போப் புறநானூறு, நன்னூல், முதலிய நூல்களைப் பயின்றார்.
   2. திருக்குறள், திருவாசகம், நாலடியார் முதலிய நூல்களைப் பலமுறை படித்து அவற்றின் நயங்களை உணர்ந்தார்.
   3. இந்தியன் சஞ்சிகை, இந்தியாவின் தொல்பொருள் ஆய்வு முதலான ஏடுகளில் தமிழ்மொழியைப் பற்றிய ஆராய்ச்சிக்கட்டுரைகளை ஆங்கிலத்தில் எழுதினார்.

4. **தமிழ்ச்செய்யுட் கலம்பகம்:**
போப் அறநூல்களிலிருந்து பொறுமை, சினமின்மை, நட்பு முதலானவற்றை விளக்கும் அறுநூறு செய்யுள்களை ஆய்ந்தெடுத்துத் ''தமிழ்ச்செய்யுட்கலம்பகம்''என்னும் நூலாய்த் தொகுத்துப் பாக்களுக்கு விளக்கமும் தந்தார்.

5. **பாடநூலின் முன்னோடி :-**

   **அ) இயற்றிய இலக்கண நூல்கள்:**
   1. போப் தமிழைக் கற்கும் காலத்தில் நூலாசிரியராகவும் விளங்கினார்.
   2. பள்ளியில் படிக்கும் குழந்தைகள் இலக்கணத்தை நன்கு அறிந்துகொள்ளும் வகையில் வினா-விடை முறையில் அமைந்த இரு இலக்கண நூல்களைப் படைத்தார்.
   3. பெரியவர்கள் கற்கும் வகையில் ஒரு இலக்கண நூலையும் படைத்தார்.

   **ஆ) இயற்றிய அகராதி நூல்கள்:**
   1. மேலைநாட்டார் தமிழை எளிதில் கற்றுக்கொள்ளும் வகையில் தமிழ் - ஆங்கில அகராதி மற்றும்,
   2. ஆங்கில – தமிழ் அகராதி ஒன்றனையும் போப் வெளியிட்டார்.

6. **மொழிபெயர்ப்பு நூல்கள்:**
   **அ) திருக்குறள் மொழிபெயர்ப்பு:** போப் திருக்குறளை நாற்பது ஆண்டுகள் படித்து, அதனை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து 1886-ல் வெளியிட்டார்.
   **ஆ) திருவாசக மொழிபெயர்ப்பு:** தமது எண்பத்தாறாம் அகவையில் 1900- ஆம் ஆண்டு திருவாசகத்தின் ஆங்கில மொழிபெயர்ப்பினை வெளியிட்டார்.
   **இ) பிற நூல்கள்:** தம் இறுதிக்காலத்தில் புறப்பொருள், வெண்பாமாலை, புறநானூறு, திருவருட்பயன் முதலிய நூல்களையும் பதிப்பித்தார்.

7. **முடிவுரை :-**
தமிழின் பெருமையைத் தரணி முழுவதும் பரப்பிய போப் 1908- ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள்-11 ஆம் நாள் தம் இன்னுயிரை நீத்தார். அவர் தம் கல்லறையில், 'இங்கே தமிழ்மாணவன் உறங்கிக் கொண்டிருக்கிறான்' என தன் இறுதிமுறியில் எழுதி வைத்தார். ஆங்கில மொழியினை அன்னை மொழியாக கொண்ட போப், "தமிழ் மாணவன்" என்று அறிவித்துக்கொண்டதால் தமிழ் உள்ளங்களில் எல்லாம் இன்றும் வாழ்கின்றார்; என்றும் வாழ்வார்.

**இயல் 1** | **குற்றியலுகரம், குற்றியலிகரம், முற்றியலுகரம்** | **இலக்கணப்பகுதி**

### அ) புறவயவினாக்கள்

1. **கீழ்க்காணும் தொடரில் காணும் குற்றியலுகரச் சொற்களை வகைப்படுத்துக:**
தம்பி, சுக்கு, மிளகு, வாங்குவதற்கு நாட்டுமருந்துக் கடைக்குச் சென்றான்.
கடைக்காரர் இரண்டனையும் எடை போட்டு ஐந்து உருபா என்றார்.

**விடைகள்:-**
   1. சுக்கு - **வன்றொடர்க் குற்றியலுகரம்.**
   2. மிளகு - **உயிர்த்தொடர்க் குற்றியலுகரம்.**

3. மருந்து - மென்றொடர்க் குற்றியலுகரம்.
4. ஐந்து - மென்றொடர்க் குற்றியலுகரம்.
5. வாங்குவதற்கு - வன்றொடர்க் குற்றியலுகரம்.
6. போட்டு - வன்றொடர்க் குற்றியலுகரம்.

**2. கீழ்க்காணும் குற்றியலுகரச் சொற்களை வகைப்படுத்துக:**

| | | | |
|---|---|---|---|
| 1. கோங்கு | 4. பந்து | 7. குத்து | 10. இ∴து |
| 2. நண்டு | 5. நாடு | 8. பாலாறு | 11. க∴சு |
| 3. கொய்பு | 6. மார்பு | 9. கொக்கு | 12. மஞ்சு |

**விடைகள்:-**

1. வன்றொடர்க் குற்றியலுகரம் - குத்து, கொக்கு
2. மென்றொடர்க் குற்றியலுகரம் - கோங்கு, நண்டு, பந்து, மஞ்சு
3. இடைத்தொடர்க் குற்றியலுகரம் - கொய்பு , மார்பு
4. நெடில்தொடர்க் குற்றியலுகரம் - நாடு
5. உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் - பாலாறு
6. ஆய்தத்தொடர்க் குற்றியலுகரம் - இ∴து , க∴சு

**3. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

| | விடைகள் |
|---|---|
| 1. கிளைக்குக் கிளை------------- தாவியது. | 1. குரங்கு |
| 2. சிறுவன்------------- வைத்துக்கொண்டு விளையாடுகிறான். | 2. பந்து |
| 3. பொற்கொடி பூக்களை------------ வந்தாள். | 3. கொய்து |
| 4. குயவர் பானையை----------- கொண்டிருந்தார். | 4. வனைந்து |
| 5. பாலின் நிறம் கொண்ட பறவை------------- | 5. கொக்கு |

**4. கீழ்க்காணும் சொற்களில் முற்றியலுகரச் சொற்களை வட்டமிடுக:-**

மாடு , பசு , கடுகு , கதவு , வீடு , அன்பு, மடு , மார்பு, விடு, மூக்கு **விடைகள்: பசு, கதவு, மடு, விடு**

**5. நிரப்புக:-**

| | விடைகள் |
|---|---|
| 1. குற்றியலுகரத்திற்கு ------------ மாத்திரை. | 1. அரை |
| 2. குற்றியலிகரத்திற்கு ------------ மாத்திரை. | 2. அரை |
| 3. முற்றியலுகரத்திற்கு ------------ மாத்திரை. | 3. ஒரு |

**பயிற்சிகள்:**

1. கீழ்க்காணும் சொற்களுள் பொருந்தாதவற்றை எடுத்து எழுதுக.
   அ) சுக்கு, மருந்து, சார்பு, மது, க∴சு விடை: **மது**
   ஆ) அ∴து, நன்று, சீட்டு, கொசு, உயர்வு விடை: **உயர்வு**

2. 1, 2, 3, 4, 5, 6, 8 ஆகிய எண்களை எழுதி இவற்றுள் நெடில்தொடர்க் குற்றியலுகர எண்ணை வட்டமிடுக.
   ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, எட்டு விடை: **ஆறு**

## ஆ) குறுவினாக்கள்

**1. குற்றியலுகரம் என்றால் என்ன?**

1. குறுமை + இயல் + உகரம் - குற்றியலுகரம். குறுகிய ஓசையுடைய உகரம் குற்றியலுகரம்.
2. தனிநெடில், ஆய்தம், உயிர், வல்லினமெய், மெல்லினமெய், இடையினமெய், ஆகியவற்றை ஈற்றெழுத்தாய்க் கொண்டிருக்கும்.
3. ஈற்றில் வல்லின மெய்யை ஊர்ந்து வரும் உகரம் **( கு,சு,டு,து,பு,று )** தமக்குரிய ஒரு மாத்திரை அளவில் குறைந்து அரை மாத்திரை அளவாய் ஒலிக்கும். **(எ.டு).** நாடு, காசு, ஆடு, மாது, கோபு, ஆறு.

**2. குற்றியலுகரத்தின் வகைகள் யாவை? சான்றுகள் தருக.**

**குற்றியலுகரத்தின் வகைகள்:**

குற்றியலுகரம் ஆறு வகைப்படும்.

**அவையாவன,**

1. நெடில்தொடர்க் குற்றியலுகரம். – பாகு. 2. ஆய்தத்தொடர்க் குற்றியலுகரம். – எ∴கு.
3. உயிர்த்தொடர்க் குற்றியலுகரம். – அழகு. 4. வன்றொடர்க் குற்றியலுகரம். – பாக்கு.
5. மென்றொடர்க் குற்றியலுகரம். – தெங்கு. 6. இடைத்தொடர்க் குற்றியலுகரம். – செய்து

**3. குற்றியலிகரம் என்றால் என்ன? சான்று தருக.**

1. **'குறுமை + இயல் + இகரம் - குற்றியலிகரம்.'** குற்றியலிகரச் சொற்கள் நிலைமொழியாய் நிற்க, வருமொழியின் முன் யகரத்தை முதலாய் கொண்ட சொல் வரும் போது, நிலைமொழியில் உள்ள "உகரம் இகரமாகும்".
2. அந்த இகரம் தனக்குரிய ஒரு மாத்திரையில் குறைந்து அரை மாத்திரையாய் ஒலிக்கும்.

**சான்றுகள்:-**

1. நாகு + யாது - நாகியாது. 2. வண்டு + யாது - வண்டியாது.
3. வீடு + யாது - வீடியாது. 4. வரகு + யாது - வரகியாது

**4. முற்றியலுகரம் என்றால் என்ன? சான்று தருக.**

**முற்றியலுகரம்** : தனக்குரிய ஒரு மாத்திரை அளவிலிருந்து குறையாது ஒலிக்கும் உகரம் முற்றியலுகரமாகும்.

**முற்றியலுகரம் வரும் இடங்கள்:**

1. வல்லினம்: தனிக்குறிலை அடுத்து சொல்லின் இறுதியில் வல்லின மெய்யின்மேல் ஊர்ந்து வரும் உகரம். **சான்று** : பகு, பசு
2. மெல்லினம்: சொற்களின் இறுதியில் மெல்லின மெய்யின் மேல் ஊர்ந்து வரும் உகரம். **சான்று**: காணு, உண்ணு
3. இடையினம்: இடையின மெய்யின் மேல் ஊர்ந்து வரும் உகரம். **சான்று:-** எழு, தள்ளு

## இயல் 1 — சொற்றொடர் வகைகள் — மொழித்திறன் பகுதி

**1. கீழுள்ள பாடலைப் படித்து பொருளுணர்ந்து வினாக்களுக்கு விடையளிக்க.**

நல்லொழுக்கம் ஒன்றே – பெண்ணே
நல்ல நிலை சேர்க்கும்
புல்லொழுக்கம் தீமை – பெண்ணே
பொய்யுரைத்தல் தீமை
இல்லறமே பெண்ணே - இங்கு
நல்லறம் மென்பார்கள்
கல்வியுடையவரே – பெண்ணே
கண்ணுடைய ராவார்.

**வினாக்கள்:**

1. நல்லநிலை சேர்ப்பது எது? **நல்லொழுக்கம்**
2. பாடலில் உள்ள விளிச்சொல்லை எடுத்து எழுதுக. **பெண்ணே**
3. துறவறம் என்பதன் எதிர்ச்சொல்லை எழுதுக. **இல்லறம்**
4. கண்ணுடையவர் என்பவர் யார்? **கல்வியுடையோர்**
5. தீமை என்பதன் எதிர்ச்சொல்லை எழுதுக. **நன்மை**

**2. கீழ்க்காணும் தொடர்களை செயப்பாட்டு வினையாக்குக.**

| | விடைகள் |
|---|---|
| அ) கலையரசி துணியைத் தைத்தாள். | **துணி கலையரசியால் தைக்கப்பட்டது.** |
| ஆ) ஆசிரியர் பாடத்தை நடத்தினார். | **பாடம் ஆசிரியரால் நடத்தப்பட்டது.** |
| இ) பூங்குழலி உணவைச் சமைத்தாள். | **உணவு பூங்குழலியால் சமைக்கப்பட்டது.** |

**4. கீழ்க்காணும் தொடர்களை செயப்பாட்டு வினையாக்குக.**

| | விடைகள் |
|---|---|
| அ) ஓவியம் மாறனால் வரையப்பட்டது. | **மாறன் ஓவியத்தை வரைந்தான்.** |
| ஆ) மாலை மல்லிகாவினால் தொடுக்கப்பட்டது. | **மல்லிகா மாலையைத் தொடுத்தாள்.** |
| இ) பாரி கபிலரால் போற்றப்பட்டார். | **கபிலர் பாரியைப் போற்றினார்.** |

**5. கீழ்க்காணும் தொடர்கள் எவ்வகையைச் சார்ந்தவை?**

| | |
|---|---|
| அ) தென்னை மரத்துக்குக் கிளைகள் இல்லை. | - **செய்தித்தொடர்** |
| ஆ) இந்தச்செயலைச் செய்தது யார்? | - **வினாத்தொடர்** |
| இ) இளமையில் கல் | - **கட்டளைத்தொடர்** |
| ஈ) என்னே, தமிழின் இனிமை! | - **உணர்ச்சித்தொடர்** |
| உ) சிறந்த நூல்களை அரங்கேற்றுதல் பண்டைக்கால வழக்கம் | - **செய்தித்தொடர்** |

**6. கீழ்க்காணும் தொடரை அடைப்புக்குறிக்குள் உள்ளவாறு மாற்றுக.**

அ) உழைத்துப் பிழை **(செய்தித் தொடராக்குக)**
**விடை:** உழைத்துப் பிழைக்க வேண்டும்.

ஆ) மாமல்லபுரத்து சிற்பங்கள் மிகவும் அழகாக உள்ளன. **(உணர்ச்சித் தொடராக்குக)**
**விடை:** மாமல்லபுரத்து சிற்பங்கள் என்னே அழகு!

இ) மணிமொழி நன்கு பாடினாள். **(பொருள் மாறாமல் எதிர்மறைத் தொடராக்குக)**
**விடை:** மணிமொழி நன்கு பாடாமல் இல்லை.

ஈ) கமலா பரிசு பெற்றாள். **(வினாத்தொடராக்குக)**
**விடை:** கமலா பரிசு பெற்றாளா?

உ) நினைவாற்றலை வளர்த்துக் கொள்க. **(கட்டளைத் தொடராக்குக)**
**விடை:** நினைவாற்றலை வளர்த்துக் கொள்.

**7. கட்டுரைப்பயிற்சி:**

**குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.**

தேசியக்கவி - சுப்பிரமணிய பாரதியார் - பிறந்த ஊர் - எட்டயபுரம் - பிறந்த ஆண்டு 1882 - பாடல் எழுதுவதில் ஆர்வம் - விடுதலை உணர்வைத் தூண்டும் வகையில் பாடல்கள் - விடுதலைப் போராட்டத் தலைவர்களுடன் நட்பு - விடுதலைக்கவி எனப் போற்றப்படுதல் - கவிதைகள் பல படைத்தல் - உடல்நலம் குன்றுதல் - இறப்பு 1921

1. முன்னுரை
2. இலக்கியப்பணி
3. படைப்புகள்
4. விடுதலைக் கவி
5. புதுக்கவிதைப் புலவன்
6. முடிவுரை

**1. முன்னுரை:**

தேசியக்கவி சுப்பிரமணிய பாரதியார் தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள எட்டயபுரம் என்ற சிற்றூரில் திசம்பர் 11, 1882 ஆம் ஆண்டு பிறந்தார். இவர் தம் பெற்றோர் சின்னசாமி ஐயர், இலக்குமி அம்மாள் ஆவர். தனது 11ம் வயதில் பள்ளியில் படிக்கும் போதே கவி புனையும் ஆற்றலை வெளிப்படுத்தினார்.

**2. இலக்கியப்பணி :**

தம் தாய்மொழி தமிழின் மீது அளவுகடந்த அன்பை கொண்டவர். பன்மொழிப்புலவரான இவர், யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவதெங்கும் காணோம்" எனக் கவிதை புனைந்தார். பாடல்கள் எழுதுவதில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார்.

**"கவிதை எழுதுபவன் கவியன்று. கவிதையே வாழ்க்கையாக உடையோன்,
வாழ்க்கையே கவிதையாகச் செய்தோன், அவனே கவி"- பாரதி**

**3. படைப்புகள்:**

சிறந்த படைப்பாளரான பாரதியார் குயில் பாட்டு, கண்ணன் பாட்டு, பாஞ்சாலி சபதம் முதலிய நூல்களைப் படைத்தளித்துள்ளார். நாடு, மொழி, இறை, பெண்மை முதலிய பாடுபொருள்களில் எண்ணற்ற பாடல்கள் இயற்றினார். ஞானரதம், சந்திரிகையின் கதை, தராசு முதலிய உரைநடை இலக்கியங்களையும் எழுதினார். இவரது பாடல்கள் விடுதலை உணர்வைத் தூண்டும் வகையில் அமைக்கப்பெற்றுள்ளன.

**4. விடுதலை கவி:**

விடுதலைப் போராட்டக்காலத்தில் தேசிய உணர்வுள்ள பாடல்களைப் பாடியதால் விடுதலைக் கவி எனப் போற்றப்படுகிறார். தன்னுடைய தாய்நாட்டை நினைந்து பெருமை கொண்டதோடு மட்டுமின்றி அதன் எதிர்காலம் எவ்வாறிருக்க வேண்டும் என்ற பார்வையும் பெற்றவர். விடுதலைப் போராட்டத் தலைவர்களான திலகர், வ.உ.சி போன்ற தலைவர்களுடன் நட்பு கொண்டிருந்தார்.

**"வந்தே மாதரம் என்போம் எங்கள் மாநிலத் தாயை வணங்குதும் என்போம்" – பாரதி**

**5. புதுக்கவிதைப்புலவன்:**

இலக்கிய சட்டங்களைத் தகர்த்தெறிந்த பாரதி, புதுக்கவிதை எனப்புகழப்படும், பாமரரும் கேட்டுணரும் வசனக் கவிதையைத் தமிழுக்குத் தந்தவர். கேலிச்சித்திரம் எனப்படும் வரையும் முறையைத் தமிழுக்கு முதலில் தந்த பெருமை பாரதியையே சாரும்.

**6. முடிவுரை:**

திருவல்லிக்கேணி கோவில் யானையால் தாக்கப்பட்டார். பிறகு சில நாட்களுக்குப் பிறகு, கடும் நோயால் பாதிக்கப்பட்டு, 1921, செப்டம்பர் 12 அன்று இயற்கை எய்தினார்.

## வளரறி செயல்பாடுகள்

**1. கீழ்க்காணும் உரைப்பத்தியைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்க.**

கவியரசு வேங்கடாசலனார், நகைச்சுவையுணர்வு மிக்கவர். கேட்பவர் விரும்புமாறு நயமாகவும் சிலேடையாகவும் பேசும் திறனுடையவர். ஒருமுறை, திருவையாறு அரசர் கல்லூரியில் நடைபெற்ற ஆண்டுவிழாவுக்கு கவியரசர் சென்றார். அவ்விழாவில் சொற்பொழிவாற்றிக் கொண்டிருந்த பேச்சாளர், ‘தமிழ்மொழியை இன்று செந்தமிழ் என்று சொல்கிறோம். செந்தமிழ் எனக்கூறுவதால், ஒரு காலத்தில் தமிழ்மொழி கொடுந்தமிழாக இருந்திருத்தல் வேண்டும்’ என்றார்.

இவர் கூறுவதனைக் கேட்ட கவியரசு வேங்கடாசலனார், உடனே எழுந்து ‘கதிரவனை இந்நாளில் செஞ்ஞாயிறு எனக் கூறுகிறோம். செஞ்ஞாயிறு என்பதனால், ஒரு காலத்தில் கருஞாயிறாகத்தான் இருந்திருத்தல் வேணடும் என்பதனை இப்பேச்சாளரின் கூற்று வெளிப்படுத்துகிறது’ எனக் கூறினார். அவர் கூறியதனைக் கேட்ட தமிழறிஞர்கள், கைகளைத் தட்டிக் குரலொலி எழுப்ப, சொற்பொழிவாற்றிய பேச்சாளர் தலைகுனிந்தார்.

மற்றொருமுறை, கவியரசுவின் திருமண விழாவுக்கு வர இயலாத நண்பர், அவரை நேரில் கண்டு வருத்தத்தைத் தெரிவித்தார். பின்னர், ‘திருமணம் சிறப்பாக நடந்ததா?’ எனக் கவியரசிடம் வினாவினார். நண்பருக்கு பதிலளித்த கவியரசு, ‘ஆம் மிகவும் நன்றாக நடந்தது. நான் ஒரு முகமதியப் பெண்ணை மணந்து கொண்டேன்’ என்றார்.

அதனைக் கேட்ட நண்பர், வியப்புடன் கவியரசுவை நோக்கினார். அவரது முகக்குறிப்பினை உணர்ந்துகொண்ட கவியரசு, ‘உண்மைதான் முகம் மதியம் போன்று விளங்கும் பெண்ணைதான் திருமணம் செய்துகொண்டேன்’ எனச் சிலேடையாகக் கூற, நண்பர் கவியரசுவின் சொல்லாடலைக் கேட்டு இன்புற்றார்.

**வினாக்கள்:**

1. **கவியரசு வேங்கடாசலனார் எத்தன்மையுடையவர்?**
   கவியரசு வேங்கடாசலனார் நகைச்சுவையுணர்வு மிக்கவர்.
2. **திருவையாறு அரசர் கல்லூரி ஆண்டுவிழாவில், சொற்பொழிவாளர் பேசிய உரை யாது?**
   தமிழ்மொழியை இன்று செந்தமிழ் என்று சொல்கிறோம். செந்தமிழ் எனக்கூறுவதால், ஒரு காலத்தில் தமிழ்மொழி கொடுந்தமிழாக இருந்திருத்தல் வேண்டும்’ என்று கூறினார்.
3. **சொற்பொழிவாளர் கூறிய செய்தியைக் கவியரசு எங்ஙனம் மறுத்துரைத்தார்?**
   இந்நாளில் உள்ள செஞ்ஞாயிறு அந்நாளில் கருஞாயிறாக இருந்திருக்க வேண்டும் என மறுத்துரைத்தார்.
4. **நண்பரிடம், கவியரசு கூறிய சிலேடை நயத்தைக் கூறுக.**
   முகம் மதியம் போன்று விளங்கும் பெண்ணைத் திருமணம் செய்துகொண்டேன் என்பதனைக் கூற ‘நான் ஒரு முகமதியப் பெண்ணை மணந்து கொண்டேன்’ என்று சிலேடை நயத்துடன் பேசினார்.
5. **‘பலகை’ - இச்சொல்லுக்குச் சிலேடை நயம் காண்க.**
   1. பலகை - மரப்பலகை, 2. பல + கை - பல கைகள் என இருவிதமான பொருளைத் தருகிறது.

**2. கீழ்க்காணும் சொற்களை அகரவரிசைப்படுத்துக.**

கெண்டை, ஏற்றம், கல்வி, ஔவியம், கொள்கை, அகவை, குழந்தை, ஈடுபாடு, காற்று, ஐவர், இலக்கியம், கூரை, உணவு, கையுறை, ஓசை, கேள்வி, ஆய்வேடு, கோடு, ஒற்றுமை, கிளை, ஊஞ்சல், கீற்று, எழுத்து, கௌதாரி.

**அ வரிசை:**

**அ**கவை, **ஆ**ய்வேடு, **இ**லக்கியம், **ஈ**டுபாடு, **உ**ணவு, **ஊ**ஞ்சல், **எ**ழுத்து, **ஏ**ற்றம், **ஐ**வர், **ஒ**ற்றுமை, **ஓ**சை, **ஔ**வியம்.

**க வரிசை:**

**க**ல்வி, **கா**ற்று, **கி**ளை, **கீ**ற்று, **கு**ழந்தை, **கூ**ரை, **கெ**ண்டை, **கே**ள்வி, **கை**யுறை, **கொ**ள்கை, **கோ**டு, **கௌ**தாரி.

**3. கீழ்க்காணும் குறிப்புகளைப் பயன்படுத்தி, விரித்தெழுதுக.**

1. ஜி.யு.போப் என்றழைக்கப்படும் ஜியார்ஜ் யுக்ளோ போப் கி.பி.1820 ஏப்ரல் 24- ல் பிறந்தார். இவரது பெற்றோர் ஜான் போப், கெதரின் யுளாப் ஆவர்.
2. தமிழ்நாட்டில் சென்னை சாந்தோம் பகுதியில் கிறித்துவச்சமயப்பணி ஆற்றிய போப், திருநெல்வேலி மாவட்டம் சாயர்புரத்தில் 1842 முதல் 1849ஆம் ஆண்டுவரை கல்விப்பணியும் சமயப்பணியும் ஆற்றினார்.
3. போப் தமிழைக் கற்கும் காலத்தில் நூலாசிரியராகவும் விளங்கினார். பள்ளியில் படிக்கும் குழந்தைகள் இலக்கணத்தை நன்கு அறிந்துகொள்ளும் வகையில் வினா-விடை முறையில் அமைந்த இரு இலக்கண நூல்களைப் படைத்தார். மேலைநாட்டார் தமிழை எளிதில் கற்றுக்கொள்ளும் வகையில் தமிழ் - ஆங்கில அகராதி ஒன்றனையும் ஆங்கில – தமிழ் அகராதி ஒன்றனையும் போப் வெளியிட்டார்.
4. போப் திருக்குறளை நாற்பது ஆண்டுகள் படித்து, அதனை 1886-ல் ஆங்கிலத்தில் மொழிப்பெயர்த்தார். 1900- ஆம் ஆண்டு திருவாசகத்தின் ஆங்கில மொழிப்பெயர்ப்பினை வெளியிட்டார்.

5. தமிழின் பெருமையைத் தரணி முழுவதும் பரப்பிய போப் 1908- ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள்-11 ஆம் நாள் தம் இன்னுயிரை நீத்தார். அவர் தம் கல்லறையில், 'இங்கே தமிழ்மாணவன் உறங்கிக் கொண்டிருக்கிறான்' என தன் இறுதிமுறியில் எழுதி வைத்தார்.

**4. தமிழ் சொற்களை எழுதுக.**

**இண்டர்வியூவில்** கேட்ட வினாக்களுக்கெல்லாம் **சரளமாக** விடையளித்தான், செழியன். **நிச்சயமாக** எனக்கு இந்த **ஜாப்** கிடைத்துவிடும் என்று நம்பினான். சிறிது நேரம் காத்திருக்கச் சொன்ன **மேனேஜரிடம்** நன்றி கூறிவிட்டு வெளியில் வந்தான் செழியன்.

| பிறமொழிச்சொற்கள் | தமிழ்ச் சொற்கள் |
|---|---|
| இண்டர்வியூ | நேர்காணல் |
| சரளமாக | தங்கு தடையின்றி |
| நிச்சயமாக | உறுதியாக |
| ஜாப் | பணி |
| மேனேஜர் | மேலாளர் |

**5. தமிழ் வளர்த்த சான்றோர்: மனோன்மணியம் பெ.சுந்தரனாரைப் பற்றி ஐந்து வரிகளுக்குக் மிகாமல் குறிப்பு எழுதுக.**

1. கேரள மாநிலத்தில் ஆலப்புழா என்னும் ஊரில் பெருமாள் பிள்ளை என்பவருக்கும் மாடத்தி அம்மாளுக்கும் 1855ம் ஆண்டு சுந்தரம் பிள்ளை பிறந்தார்.
2. ஒப்பற்ற நாடக நூலான மனோன்மணியம் இவரால் 1891-ல் எழுதி வெளியிடப்பட்டது.
3. மனோன்மணியத்தில் இடம்பெற்ற தமிழ்த்தாய் வணக்கப்பாடலான "நீராருங் கடலுடுத்த நிலமடந்தை கெழிலொழுகும்" என்ற பாடல் தமிழ்நாடு அரசினால் தமிழ்த்தாய் வாழ்த்துப்பாடலாக ஜீன் 1970-ல் அறிவிக்கப்பட்டது.
4. இவர் நூற்றொகை விளக்கம், திருவிதாங்கூர் பண்டை மன்னர் கால ஆராய்ச்சி போன்ற நூல்களை எழுதி வெளியிட்டார்.
5. பேராசிரியர் சுந்தரம் பிள்ளை தமது 42வது வயதில் 1897ஏப்ரல் 26 அன்று மறைந்தார்.

**6. விடுபட்ட கட்டங்களில் குற்றியலுகரச் சொற்களைப் பயன்படுத்தி நிரப்புக.**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1.ம | ரு | ந் | து | | | | 2.அ |
| | | | | 3.க | | | ழ |
| 4.ம | ட் | டு | | டு | | | கு |
| | | | | கு | | 6.மா | |
| | 5.கே | டு | | | | டு | அ |
| 7.ந | | | 8.உ | ண் | டு | | ள |
| ஞ் | | | | | | | ந் |
| சு | | 9.போ | ன் | ற | து | | 10.து |

| இடமிருந்து வலம் | மேலிருந்து கீழ் |
|---|---|
| 1. போதுமென்ற மனமே பொன் செய்யும் **மருந்து** | 2. அகத்தின் **அழகு** முகத்தில் தெரியும். |
| 4. ஆத்திரக்காரனுக்கு புத்தி **மட்டு** | 3. **கடுகு** சிறுத்தாலும் காரம் குறையாது. |
| 8. ஏற்றம் உண்டானால் இறக்கமும் **உண்டு** | 6. அடியாத **மாடு** படியாது. |
| 9. காலம் பொன் **போன்றது** | 7. அளவுக்கு மிஞ்சினால் அமிழ்தமும் **நஞ்சு** |
| **வலமிருந்து இடம்** | **கீழிருந்து மேல்** |
| 5. கெடுவான் **கேடு** நினைப்பான். | 10. ஆற்றில் போட்டாலும் **அளந்து** போடு |

## கற்றலடைவுச் சிறுமதிப்பீடு

**1. ஓரிரு சொற்களில் விடையளிக்க.** **4x1=4**

அ) முத்தே பவளமே மொய்த்த .......அடுத்து வரும் சொற்றொடரைக் கூறுக. **அ) பசும் பொற்சுடரே**

ஆ) கேட்டதனை வழங்கும் மரம் எது? **ஆ) கற்பக மரம்**

இ) பேச்சுக்கலையில் சிறந்து விளங்கிய தமிழறிஞர் யார்? **இ) அண்ணா**

ஈ) சிறுகதைக்கு உரமூட்டியவர் யார்? **ஈ) புதுமைப்பித்தன்**

**2. கோடிட்ட இடத்தை நிரப்புக.** **2x1=2**

அ) வாழ்த்துச் செய்யுள் .......நூலில் இடம் பெற்றுள்ளது. **அ) தாயுமானவர் திருப்பாடல் திரட்டு**

ஆ) பராபரம் ............பொருளை உணர்த்துகிறது. **ஆ) மேலான பொருள்**

**3. கீழ்க்காணும் கூற்றுச் சரியா தவறா எனக்கூறுக.** **2x1=2**

அ) குணங்குடி மஸ்தான் சாகிபைத் தைரியநாதர் என்றழைப்பர். **தவறு**

ஆ) யாதும் ஊரே யாவரும் கேளிர் எனப் பாடியவர் கணியன் பூங்குன்றனார். **சரி**

**4. தொடரில் அமைத்து எழுதுக.** **2x1=2**

அ) மணம் - **மல்லிகைப் பூவின் மணம் இனிமையானது.**

ஆ) மனம் - **கபிலன் கண்ணனின் மனம் வருந்தும்படி பேசினான்.**

## இயல் 2 | 1. இனியவை நாற்பது | செய்யுட்பகுதி

### மனப்பாடப்பகுதி

சலவரைச் சாரா விடுதல் இனிதே
புலவர்தம் வாய்மொழி போற்றல் இனிதே
மலர்தலை ஞாலத்து மன்னுயிர்க் கெல்லாம்
தகுதியால் வாழ்தல் இனிது.
- **பூதஞ்சேந்தனார்**

### அ) புறவயவினாக்கள்

**1. பொருள் எழுதுக**

1. குழவி - --------------
2. பிணி - --------------
3. சலவர் - ---------------
4. கழறும் - ---------------

**விடைகள்**

1. **குழந்தை**
2. **நோய்**
3. **வஞ்சகர்**
4. **பேசும்**

**2. பிரித்து எழுதுக**

1. பிணியின்றி - ---------------
2. அவையஞ்சான் - -------------
3. மாண்புடையார் - -------------

1. **பிணி + இன்றி**
2. **அவை + அஞ்சான்**
3. **மாண்பு + உடையார்**

**3. சேர்த்து எழுதுக**

1. மயரிகள் + அல்லராய் - -------------
2. மன் + உயிர் - -------------
3. மலர் + தலை - ------------

1. **மயரிகளல்லராய்**
2. **மன்னுயிர்**
3. **மலர்தலை**

**4. கோடிட்ட இடங்களை நிரப்புக**

1. இனியவை நாற்பது ------------- நூல்களுள் ஒன்று.
2. இனியவை நாற்பது நூலின் ஆசிரியர்------------ .

1. **பதினெண்கீழ்க்கணக்கு.**
2. **பூதஞ்சேந்தனார்.**

### ஆ) குறுவினாக்கள்

**1. பூதஞ்சேந்தனார் - குறிப்பு எழுதுக.**

1. பூதஞ்சேந்தனார் மதுரைத் தமிழாசிரியர் மகனார் ஆவார்.
2. இவர் மதுரையில் வாழ்ந்தவர்.
3. இவரின் காலம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு ஆகும்.

**2. குழவிக்கு இனிதாவது யாது?**
குழந்தைக்கு இனிதாவது நோயின்றி உடல்நலத்துடன் வாழ்தல் ஆகும்.

**3. உயிர்களுக்கு இனிமை பயப்பது எது ?**
உரிமைப்பட வாழ்தல் உலகில் வாழும் எல்லா உயிர்களுக்கும் இனிமை பயப்பதாகும்.

**4. மாண்புடையாரின் இயல்பு எத்தகையது ?**
மாண்புடையார் தன்னிடத்தில் உள்ள செல்வத்தை எல்லாருக்கும் கொடுத்து மகிழ்வர்.

### இ) சிறுவினாக்கள்

**1. இனியவை நாற்பது – குறிப்பு எழுதுக.**
**இனியவை நாற்பது நூற்குறிப்பு:**

1. இனியவை நாற்பது பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று.
2. நன்மைதரும் இனிய கருத்துகளை நாற்பது பாடல்களில் தொகுத்துரைப்பதால் **“இனியவை நாற்பது”**-எனப் பெயர் பெற்றது.
3. இந்நூலின் ஒவ்வொரு பாடலும் மூன்று அல்லது நான்கு நற்கருத்துக்களை இனிமையாக எடுத்துரைக்கிறது.

**2. எவையெல்லாம் இனிமை பயக்குமெனப் பூதஞ்சேந்தனார் கூறுகிறார்?**

1. குழந்தைகள் நோயின்றி வாழ்தல் இனிமை பயக்கும்.
2. அவைக்கு அஞ்சாமல் தான் கற்றதைச் சொல்பவனுடைய கல்வி இனிமை பயக்கும்.
3. மயக்கமற்ற பெருமைமிக்கவரிடம் சேரும் செல்வம் நீங்காது இருத்தல் இனிமை பயக்கும்.
4. வஞ்சகரைச் சேராமல் விலகியிருத்தல் இனிமை பயக்கும்.
5. பெரியோர் சொற்களைக் கேட்டு அதன்படி நடத்தல் இனிமை பயக்கும்.
6. உலகில் வாழும் எல்லா உயிர்களும் தகுதிப்பட வாழ்வது இனிமை பயக்கும் எனப் பூதஞ்சேந்தனார் கூறுகிறார்.

## இயல் 2 — 2. தமிழ்ப்பசி — செய்யுட்பகுதி

### அ) புறவயவினாக்கள்

**1. பொருள் எழுதுக.** — விடைகள்

1. குவை - ----------- — **1. குவியல்**
2. மாரன் - ------------ — **2. மன்மதன்**

**2. பிரித்து எழுதுக.**

1. வேண்டியதில்லை - ------------- — **1. வேண்டியது + இல்லை**
2. புகழெனக்கு - ------------- — **2. புகழ் + எனக்கு**
3. குவையெனக்கு - ------------- — **3. குவை + எனக்கு**
4. தமிழ்ப்பசி - ------------ — **4. தமிழ் + பசி**

**3. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. ‘தமிழ்ப்பசி’ எனும் பாடலின் ஆசிரியர் ------------ — **1. க. சச்சிதானந்தன்**
2. சச்சிதானந்தன் ------------ நாட்டைச் சார்ந்தவர். — **2. இலங்கை**

### ஆ) குறுவினாக்கள்

**1. எவையெல்லாம் வேண்டா எனக் கவிஞர் சச்சிதானந்தன் குறிப்பிடுகிறார் ?**

தன்னைப் பாராட்டி அளிக்கப்படும் பொற்குவியல்கள், போற்றும் புகழுரைகள், அரசரின் மணிமுடி, மாரனின் அழகு ஆகியவை தமக்கு வேண்டாம் எனக் குறிப்பிடுகிறார்.

**2. எவையெல்லாம் வேண்டும் எனக் கவிஞர் சச்சிதானந்தன் குறிப்பிடுகிறார் ?**

கவிஞர், “என்றென்றும் இளமை குறையாது விளங்கும் தமிழும், அத்தமிழுக்கு உயிராய் விளங்கும் கம்பன் கவிதைகளும் வேண்டும்” எனக் குறிப்பிடுகிறார்.

**3. தமிழ்ப்பசி எப்போது ஆறும் ?**

கனிச்சுவைமிக்க நூல்களைத் தமிழில் படிப்பதன் மூலம் தமிழ்ப்பசி ஆறும் எனக் கவிஞர் குறிப்பிடுகிறார்.

### இ) சிறுவினாக்கள்

**1. கவிஞர் சச்சிதானந்தனின் தமிழ்ப்பற்றினை விளக்குக.**

1. கவிஞர் சச்சிதானந்தன் தம்மைப் பாராட்டி பிறர் அளிக்கும் பொற்குவியல்களும், தம்மைப் புகழ்ந்து கூறும் புகழுரைகளும், மன்னரைப் போல் தமக்கு அளிக்கப்படும் சிறப்புகளும், பிறர் மயங்கத்தக்க அழகும் எனக்கு வேண்டாம்.
2. என்றும் இளமை அழியாத தமிழும், தமிழுக்கு உயிராய் விளங்கும் கம்பன் கவியும் வேண்டும் என்கிறார்.
3. அமுதச் சுவைமிக்கத் தமிழ் நூல்களை அள்ளிக் கற்றிட வேண்டும். அவைகளைப் படித்து தமிழ்ப் பசியாறிட வேண்டும் என்று கூறுகின்றார்.

## இயல் 2 — 3.செய்தி உருவாகும் வரலாறு — உரைநடைப்பகுதி

### அ) புறவயவினாக்கள்

**1. பிரித்து எழுதுக.** — விடைகள்

1. செய்தித்தாள் - --------------- — **1. செய்தி + தாள்**
2. ஓரிடம் - --------------- — **2. ஓர் + இடம்**

**2. சேர்த்து எழுதுக.**

1. வான் + ஒலி - ---------------- **1. வானொலி**
2. சொல் + பிழை - ---------------- **2. சொற்பிழை**

**3. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. செய்தியைப் பெறுதல் என்பது -------------- போன்றதாகும். **1. துப்பறிதல்**
2. பொதுமக்களின் கருத்துகளை --------------- வாயிலாக அறியலாம். **2. கூறெடுப்பு ஆய்வு**

## ஆ) குறுவினாக்கள்

**1. செய்தி திரட்டலுக்கு உதவும் இன்றியமையாத ஆறு வினாக்கள் யாவை?**

**செய்தி திரட்டலுக்கு இன்றியமையாத ஆறு வினாக்கள் :-**

செய்தி திரட்டும் போது ஏன்? என்ன? எப்போது? எப்படி? எங்கே? யார்? என்பன இன்றியமையாத ஆறு வினாக்களாகும்.

**2. செய்திக்களம் என்பது யாது? சான்று தருக.**

**செய்திக்களம் :-**

ஒவ்வொரு செய்தியாளரும் தமக்கு என ஒதுக்கப்பட்ட இடங்களுக்கோ அலுவலகங்களுக்கோ நாள்தோறும் சென்று செய்திகளைத் திரட்டுவர். இதனைச் 'செய்திக்களம்' எனக் குறிப்பிடுவர்.

**சான்று :-**

அமைச்சகங்கள், காவல்நிலையங்கள், மருத்துவமனைகள், நீதிமன்றங்கள் முதலியன செய்திக்களங்களாகும்.

**3. செய்தி திரட்டுவதில் உள்ள பொதுவான முறைகள் யாவை?**

**செய்தி திரட்டுவதில் உள்ள பொதுவான முறைகள் :-**

1. செய்தியாளர் நிகழ்வு நடைபெறும் இடத்துக்கு நேரடியாகச் சென்று அந்நிகழ்வில் தாமும் பங்கேற்றுச் செய்திகளைத் திரட்டுதல் ஒரு முறையாகும்.
2. செய்தியாளர், பார்வையாளராய் இருந்து செய்தியைத் திரட்டுதல் பொதுவான முறையாகும்.
3. ஒரு நிகழ்ச்சியில் பங்குபெற்றவர்களைக் கண்டு, அவர்களிடம் வினாக்கள் மூலம் செய்திகளைத் திரட்டுவது ஒரு முறையாகும்.
4. தாமே படித்தறிந்து செய்தியைத் திரட்டுவதும் செய்தியாளர் பணியாகும்.

## இ) சிறுவினாக்கள்

**1. ஒரு நிகழ்ச்சியில் பார்வையாளராகப் பங்கேற்கும் செய்தியாளரின் பணி யாது?**

**பார்வையாளராகப் பங்கேற்கும் செய்தியாளரின் பணிகள் :-**

1. விளையாட்டுப் போட்டிகள், புகழ்பெற்ற விசாரணைகள், சட்டமன்ற நடவடிக்கைகள், மாநாடுகள், பொதுக்கூட்டங்கள் ஆகிய நிகழ்ச்சியின் பின்புலத்தை நன்கு அறிந்திருத்தல் வேண்டும். அதன் மூலம் செய்திகளைத் திரட்டவேண்டும்.
2. **சான்று** : சட்டமன்ற நிகழ்வுகளைப் பார்வையிடச் செல்லும் செய்தியாளர் சட்டமன்றத்தின் விதிமுறைகளையும் நடைமுறைகளையும் தெரிந்து வைத்திருத்தல் இன்றியமையாதது ஆகும்.

**2. செய்திகளைப் பெறும் வாயில்கள் யாவை?**

**செய்திகளைப் பெறும் வாயில்கள் :-**

1. உள்ளூர்ச் செய்தியாளர், வெளியூர்ச் செய்தியாளர், சிறப்புச் செய்தியாளர், ஆர்வலர்கள் வாயிலாகவும் செய்திகளைப் பெறலாம்.
2. அரசு அறிக்கைகள், செய்தி நிறுவனங்கள் மூலமாகவும் செய்திகளைப் பெறலாம்.
3. இவை மட்டுமல்லாமல் கம்பியில்லாத்தந்தி, தொலைபேசி, செல்பேசி, தொலைஅச்சு, தொலைநகலி, வானொலி, தொலைக்காட்சி. கணினி ஆகியவற்றின் மூலம் உலகெங்கும் நடக்கும் செய்திகளை உடனுக்குடன் பெறலாம்.

**3. செய்தியின் பகுதிகளைக் குறிப்பிடுக.**

**செய்தியின் மூன்று பகுதிகள் :-**

1. தலைப்புச் செய்தி, முகப்புச்செய்தி, உடல்பகுதிச் செய்தி என மூன்று பகுதிகள் உள்ளன.
2. ஒவ்வொரு பகுதியும் முழுமையாகவும் செம்மையாகவும் அமைந்தால் தான் செய்தித்தாளில் இடம்பெறும்.

**செய்தியின் பகுதிகளின் அமைப்பு :-**

1. **தலைப்பு :** ஒரு செய்தி முழுமையும் உள்ளடக்கியதாகத் தலைப்பு அமைதல் வேண்டும். செய்திக்குத் தலைப்பும், அது நடைபெற்ற இடம், நாள் போன்றவையும் இடம்பெறும்.

2. **முகப்புச்செய்தி** : செய்தியின் முதல் பக்கத்தில் **'முகப்புச்செய்தி'** முழுக்கருத்தையும் சில சொற்களில் தெரிவிக்கும் வகையில் இடம்பெற்றிருக்கும்.
3. **உடல்பகுதிச்செய்தி** : நிகழ்வின் விவரத்தை எடுத்துக்கூறும் செய்தியின் உடல்பகுதி துணைத்தலைப்புகளுடன் அமைந்திருக்கும்.

### ஈ) நெடுவினாக்கள்

1. **செய்தி உருவாகும் முறையை விவரிக்க.**

| |
|---|
| 1. உதவியாசிரியர் குழுவின் பணி |
| 2. மெய்ப்புத் திருத்துநர் பணி |
| 3. செய்தி ஆசிரியர் பணி |
| 4. தலைமை ஆசிரியர் பணி |
| 5. பக்க வடிவமைப்பாளரின் பணி |
| 6. செய்தித்தாளாய் உருவாகிறது. |

**1. உதவியாசிரியர் குழுவின் பணி :-**
1. செய்தியாளரால் திரட்டப்பட்ட விவரங்களுடன் கூடிய செய்தியானது, நாளிதழ் அலுவலகத்திலுள்ள உதவியாசிரியர் குழுவுக்கு அனுப்பப்படுகிறது.
2. உதவியாசிரியர் குழு அதனை நிகழ்வுக்கு ஏற்றவகையில் தலைப்பு உள்ளதா, அதில் கூறப்பட்டுள்ள செய்திகளின் பொருள் சரியானதுதானா என சரிபார்த்து தேவை ஏற்பட்டால் தலைப்பிலோ, உட்பகுதிகளிலோ திருத்தங்கள் மேற்கொள்வர்.

**2. மெய்ப்புத் திருத்துநர் பணி :-**
1. உதவியாசிரியருக்குப் பின் மெய்ப்புத் திருத்துநர் பிரிவுக்குச் செய்தியானது அனுப்பப்படுகிறது.
2. செய்தியில் உள்ள எழுத்துப்பிழை, சந்திப்பிழை, சொற்பிழை, கருத்துப்பிழை, முதலியவற்றை சரிசெய்து, மீண்டும் உதவியாசிரியர் குழுவுக்கு அனுப்பப்படுகிறது.

**3. செய்தி ஆசிரியர் பணி :-**
1. உதவியாசிரியர் குழு மறுபடியுமாக சரிபார்த்தபின் செய்தியாசிரியருக்கு அனுப்பப்படுகிறது.
2. செய்தியாசிரியர், செய்தியின் தன்மை, இன்றியமையாமை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு அதனை எந்தப்பக்கத்தில் தருவது என்பதனை முடிவு செய்கிறார்.

**4. தலைமை ஆசிரியர் பணி :-**
1. நாடுதழுவிய அல்லது மாநில அளவிலான செய்தியைத் தலைமைப் பொறுப்பிலுள்ள ஆசிரியருக்கு அனுப்புவர்.
2. எளிய நிகழ்வுகளாய் இருப்பினும் அந்தப் பதிப்பில், ஏதேனும் ஓரிடத்தில் வெளியிடப்படுகிறது.
3. இன்றியமையாத செய்திகளாய் இருப்பின் செய்தித்தாளின் முதல் பக்கத்திலோ, உள்பகுதியிலோ கட்டமிட்டு வெளியிடப்படுகிறது.

**5. பக்க வடிவமைப்பாளரின் பணி :-**
1. இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட செய்திகள் பக்க வடிவமைப்பாளரிடம் ஒப்படைத்து, செய்தியாசிரியர் கூறும் இடங்களில் அவை வடிவமைக்கப்படுகின்றன.
2. ஒரு செய்திப்பக்கம் முழுமைபெற்றதும் அந்தப் பக்கமானது அச்சுப்பக்கமாய் மாறுகிறது.

**6. செய்தித்தாளாய் உருவாகிறது :-**
1. அதன் பிறகு வடிவமைப்புப் பிரிவுக்குக் கொண்டு செல்லப்பட்டு, அச்சுத் தகடாய் மாற்றம் செய்யப்படுகிறது.
2. அதனைத் தொடர்ந்து அச்சு இயந்திரப்பிரிவுக்கு எடுத்துச் செல்லப்பட்டு, தாளில் அச்சிடப்பட்டுச் செய்திகளாய் வெளிவருகிறது.

## இயல் 2 — 3. மகிழ்ச்சிக்கான வழி — துணைப்பாடப் பகுதி

### நெடுவினாக்கள்

1. **"மகிழ்ச்சிக்கான வழி" கதையைச் சுருக்கி எழுதுக.**

| |
|---|
| 1. முன்னுரை |
| 2. முல்லாவின் ஆற்றல் |
| 3. கவலைக்குக் காரணம் என்ன? |
| 4. செல்வந்தரின் பதிலுரை |
| 5. பணத்தைப் பறித்துக் கொண்டு ஓடினார் |

6. பணப்பையைக் கண்டு மகிழ்ச்சி.
7. முல்லாவின் வினாவும், செல்வரின் விடையும்.
8. முல்லாவின் மகிழ்ச்சிக்குக் காரணம் கூறுதல்.
9. மனம் மாறிய செல்வந்தர்
10. முடிவுரை

**1. முன்னுரை :**

தற்கால வாழ்க்கை முறைகளில் மனித தேவைகளுக்குப் பணம் ஒரு அடிப்படை மட்டுமே, இதுவே அளவுக்கு அதிகமாக சேரும் போது அது பேராசையாக மாறும். அதன் விளைவு மகிழ்ச்சி நம்மை விட்டு நீங்கும். இக்கதை மகிழ்ச்சி எவ்வாறு நிலைநிற்கும் என்பதை உணர்த்துவதாக அமைந்துள்ளது.

**2. முல்லாவின் ஆற்றல் :**

முல்லா நசுருதின் பெரும்புலமையும் அறிவாற்றலும் மிக்கவர். அவரின் கதையில் ஏதேனும் ஓர் ஆழ்ந்த தத்துவமோ, குறிக்கோளோ இடம்பெற்றிருக்கும். பிறர் மனம் புண்படாமல் நகைச்சுவையுணர்வும், சிந்தனைமிக்க கதைகளும் அமைந்திருக்கும்.

**3. கவலைக்குக் காரணம் என்ன? :**

முல்லா நசுருதின் ஒருமுறை வெளியூருக்குச் செல்லும் வழியில், மரத்தடியில் ஒருவர் பணக்காரர்போலக் காணப்பட்டாலும் அவரின் முகம் வாடியிருப்பதைக் கண்டு , முல்லா அவரிடத்தில் சென்று "ஐயா , நீங்கள் கவலைப்படக் காரணம் என்ன?" எனக் கேட்டார்.

**4. செல்வந்தரின் பதிலுரை :**

முல்லாவிடத்தில் அவர் "ஐயா, நீங்கள் கூறுவது சரியே. எனக்கு ஏராளமான சொத்துகள் இருப்பினும் ஒரு நிமிடம் கூட என்னால் மகிழ்ச்சியாக இருக்கமுடியவில்லை. என் செல்வங்களையெல்லாம் யாராவது கவர்ந்துக் கொண்டு போய்விடுவார்களோ என்ற பயம் உள்ளது.

**5. பணத்தைப் பறித்துக் கொண்டு ஓடினார் :**

இதனைக் கேட்டுக் கொண்டிருந்த முல்லா, திடீரென செல்வரின் பையைப் பிடுங்கிக் கொண்டு ஓடினார்.உடனே செல்வர், பதறியபடி என் பணம், என் பணம்,என்று முல்லாவின் பின்னால் ஓடினார். முல்லா மீண்டும் அந்த மரத்தடிக்கே வந்து,பணப்பையை மரத்தடியில் வைத்து விட்டு, மரத்தின் பின்னால் ஒளிந்துகொண்டார்.

**6. பணப்பையைக் கண்டு மகிழ்ச்சி :**

முல்லாவைப் பிடிக்க இயலாமல்,செல்வர் மரத்தடிக்கு வந்தார். அங்கே பணப்பையைக் கண்டு அவர் "கடவுளே நான் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறேன். காணாமல்போன பணம் கிடைத்ததில் என் கவலையெல்லாம் பறந்துவிட்டது எனக் கூறினார்.

**7. முல்லாவின் வினாவும் செல்வரின் விடையும் :**

முல்லா செல்வந்தரின் முன்னால் வந்து, " ஐயா வாழ்க்கையில் ஒரு நிமிடங்கூட மகிழ்ச்சியாக இல்லை என்று வருந்திய தங்களின் வருத்தத்தை நீக்கவே பணப்பையைப் பறித்துக் கொண்டு ஓடினேன். பறிபோனதென நினைத்த செல்வம் திரும்பக் கிடைத்ததும் தாங்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு ஈடு இணையே இல்லை அல்லவா?". என்று கேட்டார்.

செல்வந்தரும் மகிழ்ச்சியுடன் "ஆம், ஐயா ! பணப்பை கிடைத்ததும் நான் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை". என்றார்.

**8. முல்லாவின் மகிழ்ச்சிக்குக் காரணம் கூறுதல் :**

செல்வந்தர் முல்லாவைப் பார்த்து, "ஐயா, வசதியற்ற தங்களின் மகிழ்ச்சிக்கு என்ன காரணம்?". என்றுக் கேட்டார். அதற்கு முல்லா " தேவைக்கு அதிகமாகச் செல்வத்தைச் சேர்ப்பவன், மேன்மேலும் சேர்க்க வேண்டும் என்ற பேராசைத் தோன்றும். பிறகு அதனைப் பாதுகாக்க வேண்டும் என நினைக்கும்போது மகிழ்ச்சியும் நீங்கிவிடும். நான் இன்றியமையாத தேவைக்கு மட்டுமே பணம் சேர்ப்பதால் மகிழ்ச்சியுடன் இருக்கிறேன்".என்றார்.

**9. மனம் மாறிய செல்வந்தர் :**

செல்வந்தர், முல்லா கூறிய சீரிய உண்மையைப் புரிந்து கொண்டு, தாம் சேர்த்த செல்வத்தை எவ்வாறு நல்வழிகளில் செலவிடலாம் என மகிழ்ச்சியோடு திட்டமிடத் தொடங்கினார்.

**10. முடிவுரை :**

எப்போதும் மகிழ்ச்சியாய் இருக்க வழி சொன்ன முல்லா, "வருகிறேன், ஐயா" என்று கூறி விடைப்பெற்றார். பேராசைக் கொண்டு மகிழ்ச்சியை இழக்காமல் போதுமென்ற மனதுடனே வாழ்வதற்கு பழகிக்கொள்வோம்.

## இயல் 2 — இலக்கியவகைச் சொற்கள் — இலக்கணப் பகுதி

### அ) புறவயவினாக்கள்

**1. கீழ்க்காணும் திசைச்சொற்களுக்குரிய தமிழ்ச்சொற்களைப் பொருத்துக.**

**விடைகள்**

| திசைச்சொல் | தமிழ்ச்சொல் |
|---|---|
| பண்டிகை | திருவிழா |
| வெள்ளம் | நீர்ப்பெருக்கு |
| வியாபாரம் | வணிகம் |
| அசல் | மூலம் |
| அச்சன் | தந்தை |
| ஜமக்காளம் | விரிப்பு |
| வேடிக்கை | காட்சி |

**2. பொருத்துக :**

**விடைகள்**

| | |
|---|---|
| 1. நிலம், நாய் | - பெயர் இயற்சொல் |
| 2. வந்தது, படித்தான் | - வினை இயற்சொல் |
| 3. களிறு, புரவி | - பெயர்த்திரிசொல் |
| 4. வினவினான், நோக்கினான் | - வினைத்திரிசொல் |

**3. பயிற்சி:**

அன்பரசி கேணியிலிருந்து தண்ணீர் கொணர்ந்தாள். தோட்டத்தில் ரோஜாவைப் பறித்து மாலையாக்கினாள். கோவிலுக்குச் சென்று இறைவனுக்குப் பூஜை செய்தாள். அங்கு அந்தணர் மறைமொழி கேட்டு மெய்ம்மறந்து நின்றாள்.

**மேற்கண்ட பத்தியிலுள்ள சொற்களைக் கீழ்க்குறித்தவாறு வகைப்படுத்துக.**

1. இயற்சொல் : **தண்ணீர், மாலை**
2. திரிசொல் : **கொணர்ந்தாள், மறைமொழி**
3. திசைச்சொல் : **கேணி, அந்தணர்**
4. வடசொல் : **ரோஜா, பூஜை**

### ஆ) குறுவினாக்கள்

**1. இலக்கிய வகையால் சொற்கள் எத்தனை வகைப்படும் ? அவையாவை ?**

இலக்கிய வகையால் சொற்கள் **நான்கு** வகைப்படும். அவையாவன,
1. இயற்சொல் 2. திரிசொல் 3. திசைச்சொல் 4. வடசொல் என்பனவாகும்.

**2. திரிசொல் என்றால் என்ன ? சான்று தருக ?**

ஒரு பொருள் குறித்த பல சொல்லாகவும், பல பொருள் குறித்த ஒரு சொல்லாகவும், இருப்பின் கற்றவர்க்கே அரிதில் பொருள் விளங்கக்கூடிய சொற்கள் திரிசொற்கள் எனப்படும்.

**சான்று** : **பீலி, உகிர், ஆழி** (பீலி - மயில்தோகை, உகிர் - நகம், ஆழி - கடல், சக்கரம்)

**3. திரிசொல் வகைகள் யாவை? சான்று தருக.**

திரிசொல் **இரண்டு** வகைப்படும். அவையாவன
1. பெயர்த்திரிசொல் 2. வினைத்திரிசொல்

**சான்று** : 1. பெயர்த்திரிசொல் - எயிறு, வேய், மடி, நல்குரவு
2. வினைத்திரிசொல் - வினவினான், விளித்தான், நோக்கினார்

**4. வடசொல் என்றால் என்ன? சான்று தருக.**

வடமொழிச் சொற்கள் ( சமஸ்கிருதம் ) தமிழ்மொழியில் வந்து தமிழின் இயல்புக்கு ஏற்ப வழங்குமானால் அவை வடசொல் எனப்படும்.

**சான்று** :

| வடசொல் | | தமிழ்சொல் |
|---|---|---|
| கமலம் | - | தாமரை |
| விஷம்(விடம்) | - | நஞ்சு |
| புஷ்பம்(புட்பம்) | - | மலர். |

இயல் 2 | வகுப்பறைத்திறன்கள் | மொழித்திறன்பயிற்சி

**1. கீழுள்ள உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.**

அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப்பொருள்கள் நான்கனையும் உணர்த்தி, மக்களை நல்வழிப்படுத்தும் இலக்கியங்கள் பேரிலக்கியங்கள் எனப்படும். மேற்கண்ட நான்கு பொருள்களுள் ஒன்றோ சிலவோ குறைந்து வந்து தெய்வம், அரசன், வள்ளல், குரு முதலியோரின் சிறப்பினைக் கற்பனை செய்து பாடுவது சிற்றிலக்கியம். இவற்றை வடநூலார் பிரபந்தம் என்பர். பிரபந்தம் என்பதற்கு நன்கு கட்டப்பட்டது என்பது பொருள். தமிழ்ச் சிற்றிலக்கியங்கள் தொண்ணூற்றாறு வகைப்படும்.

**வினாக்கள்:**

1. பேரிலக்கியங்கள் என்றால் என்ன?
   **அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப்பொருள்கள் நான்கனையும் உணர்த்தி, மக்களை நல்வழிப்படுத்தும் இலக்கியங்கள்.**
2. பிரபந்தம் என்பதன் பொருள் யாது? **நன்கு கட்டப்பட்டது**
3. உரைநடைப்பகுதியில் இடம்பெற்றுள்ள எதிர்ச்சொற்களை எழுதுக. **பேரிலக்கியம் x சிற்றிலக்கியம்**
4. இலக்கியம் - பிரிக்கும் முறை - அ) இல+கியம் ஆ) இலக்கிய+இம் **இ) இலக்கு+இயம்**

**2. கீழ்க்காணும் சொற்றொடர்களை அடைப்புக்குறிக்குள் உள்ளவாறு மாற்றுக.**

1. பாரதிதாசன், "தமிழ் என் உயிர் என்பேன்" என்று கூறினார். **(அயற்கூற்றாக்குக)**

   **விடை:** பாரதிதாசன் தமிழைத் தம் உயிர் என்றார்.
2. தான் நாளை வருவதாகப் பூவிழி கூறினாள். **(நேர்க்கூற்றாக்குக)**

   **விடை:** "நான் நாளை வருவேன்" என்று பூவிழி கூறினாள்.
3. "நீ வைகறையில் துயிலெழ வேண்டும்" என்று ஆசிரியர் சிந்தனைச் செல்வனிடம் கூறினார். **(அயற்கூற்றாக்குக)**

   **விடை:** ஆசிரியர் சிந்தனை செல்வனிடம் வைகறையில் துயிலெழ வேண்டுமாறு கூறினார்.
4. தந்தை தம்மகனை நோக்கி, "நீ நாள்தோறும், ஒழுங்காகப் பாடத்தைப் படித்துக்கொண்டு வா" என்று கூறினார். **(அயற்கூற்றாக்குக)**

   **விடை:** நாள்தோறும் ஒழுங்காகப் பாடத்தைப் படித்துக் கொண்டு வருமாறு தந்தை தம் மகனிடம் கூறினார்.
5. பழத்தைத் தனக்குக் கொடுக்குமாறு கபிலனை வேலன் கேட்டான். **(நேர்க்கூற்றாக்குக)**

   **விடை:** "கபிலனிடம் பழத்தைத் கொடு" என வேலன் கேட்டான்.

**3. உரையாடலைச் செய்தியாக்குதல்**

அ) அமைச்சர்: "முல்லைக்கொடியின் துயர்தீர்த்து வாழ்வளித்த பாரிவள்ளலே! இன்று உங்கள் முகம் வாட்டமாக இருக்கக் காரணம் என்ன?"
**விடை:** முல்லைக்கொடியின் துயர்தீர்த்து வாழ்வளித்த பாரிவள்ளலிடம் அன்று முகம் வாட்டமாக இருக்கக் என்ன காரணம் என அமைச்சர் கேட்டார்.

ஆ) குழலி: "எழில் நாளை உன்வீட்டுக்கு வரலாம் என்று எண்ணுகின்றேன். இருவரும் சேர்ந்து கணக்குகளைப் போடலாமா?"
**விடை:** குழலி, எழிலிடம் மறுநாள் தான் அவள் வீட்டுக்கு வர எண்ணுவதாகவும், தாங்கள் இருவரும் சேர்ந்து கணக்குகளைப் போட முடியுமா என்றும் கேட்டாள்.

**4. விடுபட்ட இடங்களில் தமிழெண்களை எழுதி நிரப்புக.**

1. க ,------ -------- ------- ரு----- -------- அ ------ ------
   **விடைகள்:** **க**, உ, ங, ச, **ரு**, **சா**, எ, அ, **கூ**, **க**0.
2. கக, **கஉ** ------ ---------- --------- க**சா**, ------ ---------- ------ **உ**0
   **விடைகள்:** **கக**, **க**உ, **க**ங, **க**ச, **க**ரு, **க**சா, **க**எ, **க**அ, **க**கூ, உ0.

**5. கடிதம் எழுதும் பயிற்சி**

**காணாமல் போன மிதிவண்டியைக் கண்டுபிடித்துத் தருமாறு காவல்துறை ஆய்வாளருக்கு முறையீட்டுக் கடிதம் ஒன்று எழுதுக.**

**அனுப்புநர்**

அஅஅஅஅஅஅஅ
15, கம்பர் தெரு,
சிவகாசி.

**பெறுநர்**

காவல்துறை ஆய்வாளர் அவர்கள்,
காவல்துறை ஆய்வாளர் அலுவலகம்,
விருதுநகர்.

**ஐயா,**

**பொருள்:** காணாமல் போன மிதிவண்டியைக் கண்டுபிடித்துத் தருதல் தொடர்பாக.

நான் மேற்கண்ட முகவரியில் வசிக்கிறேன். இன்று (10-06-2017) காலை 9.30மணிக்கு மருதப்பர் கோவிலுக்கு வழிபாட்டிற்குச் சென்றுவிட்டுத் திரும்பி வந்து பார்த்தபோது மிதிவண்டியைக் காணவில்லை. அருள்கூர்ந்து எனது மிதிவண்டியைக் கண்டுபிடித்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி

விருதுநகர் தங்கள் உண்மையுள்ள
10 - 6 - 2017 அஅஅஅஅஅ

**காணாமல் போன வண்டி பற்றிய விவரங்கள்**

1. மிதிவண்டி தயாரிப்பு நிறுவனம் : ஹீரோ சைக்கிள்ஸ்
2. மிதிவண்டி நிறம் : பச்சை
3. எனது அலைபேசி எண் : 9787609090

**உறைமேல் முகவரி**

காவல்துறை ஆய்வாளர் அவர்கள்,
காவல்துறை ஆய்வாளர் அலுவலகம்,
விருதுநகர்.

**6. வளரறி செயல்பாடுகள்**

பண்டைத்தமிழர் நாகரிகத்திலும் பண்பாட்டிலும் சிறந்து விளங்கினர். செல்வத்தை மிகுதியாகப் பெற்றிருந்தோர், இல்லாதவருக்குக் கொடுத்து உதவினர். இன்றிருந்து நாளை மடியும் பொருட்செல்வத்தினும், நின்று நிலவும் அறச்செல்வமே உயர்ந்தது என்பதனை நன்கு உயர்ந்திருந்தனர்.

நால்வகைப் படையுடைய அரசனேயானாலும், அறநெறியே அவனுக்குச் சிறப்பைத் தரும் என்னும் கருத்தில் அசையா நம்பிக்கை வைத்திருந்தனர். அமிழ்தமே கிடைப்பினும், அதனைத் தனித்து உண்ணாமல், பிறருக்கு உவந்தளிப்பவரைப் பசிப்பிணி மருத்துவர் என அழைத்து மகிழ்ந்தனர்.

மனித இனம் முழுவதனையும் ஒன்றாகக் காணும் மனம் படைத்திருந்தனர். யாதும் ஊரே யாவரும் கேளிர் என்னும் பொதுவுடைமைக் கொள்கையைப் பின்பற்றி வாழ்ந்தனர். தன்னிலையில் தாழாமையும் தாழ்வு ஏற்படின் உயிர் வாழாமையும் மானமெனக் கருதினர்.

**வினாக்கள்:**

1. பண்டைத்தமிழர், அறச்செல்வமே உயர்ந்தது எனக் கருதக் காரணம் என்ன?
   **பொருட்செல்வம் எதிர்காலத்தில் அழியக்கூடியது. அறச்செல்வம் என்றுமே அழியாதது ஆகும்.**
2. அரசனுக்கு நால்வகைப் படையைக்காட்டிலும் சிறப்பைத் தருவது எது? **அறநெறி**
3. பிறருக்கு உவப்புடன் உணவளித்தோரை எவ்வாறு அழைத்தனர்? **பசிப்பிணி மருத்துவர்**
4. தமிழரின் மானம் எத்தகையது? **தன்னிலை தாழாமை**
5. உரைப்பத்திக்கு ஏற்புடைய தலைப்பைத் தருக. **பண்டைத் தமிழர் நாகரிகம்**

**7. கீழ்க்காணும் சொற்களை அகர வரிசையில் எழுதுக.**

நேர்க்காணல், துப்பறிதல், நோன்பு, தோகை, நொச்சி, தையல், நிகழ்ச்சி, தேர்வு, நீச்சல், திரட்டு, நடைமுறை, தூக்கம், நெய்வேலி, தொலைபேசி, தலைப்பு, நூலாய்வு, தெற்கு, நாடு, தாமரை, தீஞ்சுவை, நைதல், நுங்கு

**த வரிசை:**

**த**லைப்பு, **தா**மரை, **தி**ரட்டு, **தீ**ஞ்சுவை, **து**ப்பறிதல், **தூ**க்கம், **தெ**ற்கு, **தே**ர்வு, **தை**யல், **தொ**லைபேசி, **தோ**கை.

**ந வரிசை:**

**ந**டைமுறை, **நா**டு, **நி**கழ்ச்சி, **நீ**ச்சல், **நு**ங்கு, **நூ**லாய்வு, **நெ**ய்வேலி, **நே**ர்காணல், **நை**தல், **நொ**ச்சி, **நோ**ன்பு

**8. இலக்கிய வகைச்சொற்கள் வகைப்படுத்துதல்.**

| இயற்சொல் | திரிசொல் | திசைச்சொல் | வடசொல் |
|---|---|---|---|
| ஞாயிறு | துயில் | கேணி | புஷ்பம் |
| பள்ளி | எயிறு | பண்டிகை | உதயம் |
| சென்றான் | விளித்தான் | வியாபாரம் | சந்தோஷம் |
| பார்த்தான் | நோக்கினாள் | வேடிக்கை | ஸர்ப்பம் |

**9. கீழ்க்காணும் தொடர்களில் இல் அல்லது உள் என்னும் சொற்களை இணைத்து எழுதுக.**

1. ஏறுதழுவுதல் வீரவிளையாட்டு ஒன்று.
   ஏறுதழுவுதல் **வீரவிளையாட்டுகளுள்** ஒன்று.
2. பறவை மரம் கூடு கட்டியிருந்தது.
   பறவை **மரத்தில்** கூடு கட்டியிருந்தது.
3. பேரறிஞர் அண்ணா சிறந்த மேடைப்பேச்சாளர் ஒருவர்.
   பேரறிஞர் அண்ணா சிறந்த **மேடைப்பேச்சாளர்களுள்** ஒருவர்.
4. தமிழ்நூல்கள் எளியநடை எழுதுதல் வேண்டும்.
   தமிழ்நூல்கள் **எளியநடையில்** எழுதுதல் வேண்டும்.
5. திருக்குறள் அறநூல்கள் ஒன்று.
   திருக்குறள் **அறநூல்களுள்** ஒன்று.
6. பள்ளியில் நடைபெற்ற ஓவியப்போட்டி கலந்து கொண்டேன்.
   பள்ளியில் நடைபெற்ற **ஓவியப்போட்டியில்** கலந்து கொண்டேன்.

## கற்றலடைவு சிறுமதிப்பீடு

**1. கோடிட்ட இடத்தில் உரிய பொருளைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **விடைகள்** **5x1=5**

1. குழவி என்பதன் பொருள்............
   அ) ஒரு வகைத்தேனீ ஆ) ஒருவகைக்குருவி இ) குழந்தை **இ) குழந்தை**
2. பிணி என்பதன் பொருள்................
   அ) நோய் ஆ) வறுமை இ) ஏழை **அ) நோய்**
3. சலவர் இச்சொல்லின் எதிர்ச்சொல் ......
   அ) நண்பர் ஆ) நல்லவர் இ) வஞ்சகர் **ஆ) நல்லவர்**
4. கழறும் என்பதன் பொருள் .......
   அ) பேசும் ஆ) குழறும் இ) எழுதும் **அ) பேசும்**
5. குவை என்பதன் பொருள் .......
   அ) குவளை ஆ) குவியல் இ) மலை **ஆ) குவியல்**

**2. ஓரிரு சொற்களில் விடையளிக்கவும்.** **5x1=5**

அ) பதினெண்கீழ்க்கணக்கு நூல்களின் பெயர்களுள் நான்கனை எழுதுக.
**நாலடியார், திருக்குறள், இன்னாநாற்பது, இனியவை நாற்பது**

ஆ) யாருடன் சேராமல் இருந்தால் இனிமை தரும்? **வஞ்சகரைச் சேராமல் விலகியிருத்தல் இனியது.**

இ) குழந்தை எப்படி வாழ்தல் வேண்டும்? **பிணியின்றி வாழ்தல் வேண்டும்.**

ஈ) யாருடைய அழகு வேண்டா எனக்கவிஞர் சச்சிதானந்தன் கூறுகிறார்? **மாரன் (மன்மதன்)**

உ) கவிஞர் சச்சிதானந்தன் பிறந்த நாடு எது? **இலங்கை யாழ்ப்பாணம் மாவட்டம்**

## இயல் 3 | 1. திருவள்ளுவ மாலை | செய்யுட்பகுதி

### மனப்பாடப்பகுதி

தினையளவு போதாச் சிறுபுல்நீர் நீண்ட
பனையளவு காட்டும் படித்தால் - மனையளகு
வள்ளைக்(கு) உறங்கும் வளநாட! வள்ளுவனார்
வெள்ளைக் குறட்பா விரி.
- கபிலர்

### அ) புறவயவினாக்கள்

**1. பொருள் எழுதுக** — விடைகள்

1. வள்ளை - ------------- — **1. நெல் குத்தும்போது பெண்கள் பாடும் பாட்டு**
2. அளகு - --------------- — **2. கோழி**

**2. பிரித்து எழுதுக**

1. தினையளவு - ------------- — **1. தினை + அளவு**
2. பனையளவு - ------------ — **2. பனை + அளவு**

**3. கோடிட்ட இடங்களை நிரப்புக :-**

1. திருக்குறளின் பெருமையை விளக்கும் நூல் ------------- — **1. திருவள்ளுவமாலை**
2. ‘தினையளவு’ என்னும் பாடலில் ------------ அணுகுமுறை அமைந்துள்ளது. — **2. கலீலியோ கலிலியின்**

### ஆ) குறுவினாக்கள்

**1. தினையளவு எனத் தொடங்கும் பாடலில் பயின்று வரும் உவமையை விளக்குக.**

**உவமை:-**
சிறு புல்லின் தலையில் உள்ள தினையளவினும் சிறிய பனிநீர், உயர்ந்து வளர்ந்திருக்கும் பனைமரத்தின் உருவத்தினைத் தன்னுள் தெளிவாகக் காட்டும்.

**2. கோழி உறங்கக் காரணம் என்ன?**
பெண்கள் பாடும் உலக்கைப் பாட்டின் இன்னிசையைக் கேட்டுக் கோழி கண்ணுறங்குகிறது.

### இ) சிறுவினா

**1. திருக்குறளின் பெருமையைக் கபிலர் எவ்வாறு விளக்குகிறார்?**

1. சிறுபுல்லின் தலையில் உள்ள தினையளவினும் சிறிய பனிநீர் நீண்டு வளர்ந்திருக்கும் பனைமரத்தின் உருவத்தினைத் தன்னுள் தெளிவாகக் காட்டும்.
2. அதுபோல, மிகச்சிறிய அளவான இரண்டு அடிகளைக் கொண்ட திருக்குறள், மிகப்பெரிய அரிய கருத்துகளையெல்லாம் தன்னுள் பொதிந்து வைத்திருக்கிறது என்று கபிலர் திருக்குறளின் பெருமையை விளக்குகிறார்.

## இயல் 3 | நளவெண்பா | செய்யுட்பகுதி

### அ) புறவயவினாக்கள்

**1. பொருள் எழுதுக :-** — விடைகள்

1. ஆழி - ------------- — **1. கடல்**
2. தார் - ------------- — **2. மாலை**
3. விசும்பு - ------------ — **3. வானம்**
4. காசினி - ------------- — **4. நிலம்**
5. அரவு - ------------- — **5. பாம்பு**
6. புள் - ------------- — **6. பறவை**
7. மேதி - ------------- — **7. எருமை**
8. ஞாலம் - ------------ — **8. உலகம்**
9. களிகூர - ------------- — **9. மகிழ்ச்சி மிக**
10. மழவிடை - ------------- — **10. இளைய காளை**

**2. பிரித்து எழுதுக:-**

1. பசுந்தலை - --------------
2. மாசிலா - --------------
3. ஈரிருவர் - --------------
4. பைங்குவளை - -------------
5. செந்தாமரை - -------------

1. **பசுமை + தலை**
2. **மாசு + இலா**
3. **இரு + இருவர்**
4. **பசுமை + குவளை**
5. **செம்மை + தாமரை**

**3. சேர்த்து எழுதுக:-**

1. சுயம் + வரம் - --------------
2. மாசு + இலா - --------------
3. செம்மை + தாமரை- --------------
4. கோடு + இடறி - ---------------
5. அருள் + என்றாள் - --------------

1. **சுயம்வரம்**
2. **மாசிலா**
3. **செந்தாமரை**
4. **கோடிடறி**
5. **அருளென்றாள்**

**4. கோடிட்ட இடங்களை நிரப்புக:-**

1. நளவெண்பாவை இயற்றியவர் --------------------
2. புகழேந்திப்புலவர் ------------- என்று போற்றப்படுகிறார்.
3. நளவெண்பாவில் அமைந்துள்ள வெண்பாக்களின் எண்ணிக்கை ------------
4. புகழேந்திப்புலவரை ஆதரித்த வள்ளல் ------------

1. **புகழேந்திப்புலவர்**
2. **வெண்பாவில் புலவர்**
3. **431**
4. **சந்திரன் சுவர்க்கி**

## ஆ) குறுவினாக்கள்

**1. நளவெண்பா - குறிப்பு வரைக**:

1. நளனது, வரலாற்றை வெண்பாக்களால் கூறும் நூலாகும்.
2. இந்நூல் சுயம்வர காண்டம், கலிதொடர் காண்டம், கலிநீங்கு காண்டம், என மூன்று காண்டங்களை உடையது.
3. இதில் நானூற்று முப்பத்தொரு வெண்பாக்கள் உள்ளன.

**2. சுயம்வரம் என்பது யாது?**

தனக்கேற்ற மணமகனை, அரசிளங்குமாரர்கள் நிரம்பிய சபையில், உற்றார், உறவினர் முன்னிலையில் தன் மனத்திற்கு இனிய ஒருவனுக்கு மாலையிட்டுத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுதலாகும்.

**3. தமயந்தியிடம் குருநாட்டு மன்னனைத் தோழி எவ்வாறு அறிமுகப்படுத்தினாள்?**

1. செங்கழுநீர் அரும்பினைப் பாம்பின் தலை என எண்ணி, நாரையின் குஞ்சு அச்சமுற்று இரவெல்லாம் வாய்விட்டு அலறியது.
2. தாய்ப்பறவை தன் குஞ்சு உறங்கும் பொருட்டு இரவு முழுவதும் தாலாட்டியது.
3. வள்ளைக்கொடிகள் மலிந்த குருநாட்டு மன்னன் இவன்.என அறிமுகப்படுத்தினாள்.

**4. அவந்தி நாட்டு வளம் எத்தகையது?**

அவந்தி நாட்டில் அழகிய குவளை மலர்களை எருமைக்கடாக்கள் உண்ணவரும்பொழுது, அம்மலரில் இருந்த வண்டுகள் இசைத்த பண்ணொலியைக் கேட்டு, உண்ணாமல் மயங்கி நிற்கும்.

**5. கலிங்க நாட்டின் வளம் குறித்து எழுதுக?**

1. எருமைகள் தேன் சொரியும் தாமரைத் தடாகத்தினைக் கலக்கும். அப்பொழுது இளம் வாளை மீன்கள் செந்தாமரைப் பூக்கள் மேல் பாய்கின்றன.
2. இதனால் பூக்களில் உள்ள வண்டுகளும், அன்னப்பறவைகளும் அஞ்சி பறக்கின்றன.
3. இத்தகைய தெளிந்த நீர் வளமுடையது கலிங்க நாடு.

**6. தமயந்தி மனம் தடுமாறக் காரணம் என்ன?**

தோழி, அரசர்களைப்பற்றிக் கூறியதைக் கேட்டு, தேவர்கள் நால்வரும் நளனுருவில் வீற்றிருந்ததைக் கண்டு, இவர்களில் யார் உண்மையான நளன் என அறியாது தமயந்தி மனத்தடுமாற்றம் உற்றாள்.

## இ) சிறுவினாக்கள்

**1. புகழேந்திப்புலவர் - குறிப்பு வரைக.**

| | | |
|---|---|---|
| பெயர் | - | புகழேந்திப்புலவர் |
| பிறந்த ஊர் | - | காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள பெருங்களத்தூர். |
| காலம் | - | கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டு |
| ஆதரித்த வள்ளல் | - | சந்திரன் சுவர்க்கி |
| சிறப்பு | - | வரகுண பாண்டியனின் அவைப் புலவராய் இருந்தார். |

இவர் ''**வெண்பாவிற் புகழேந்தி**'' எனவும் போற்றப்படுகிறார்.

**2. தமயந்தி நளனை எவ்வாறு கண்டறிந்தாள்?**

1. சுயம்வரத்திலிருந்த தேவர்களின் கண்கள் இமையாமல்; கால்கள் நிலம் தோயாமலும்: சூடிய மாலைகள் வாடாமல் இருந்தன.
2. தாமரை மலரில் விரும்பி உறைகின்ற திருமகளைப் போன்ற தமயந்தி, நளனின் கண்ணிமைத்தல், கால் நிலம் தோய்தல், அழகு மாலை வாடுதல் என ஆராய்ந்து தன்னை விரும்பிய நளனைக் கண்டறிந்தாள்.

**கூடுதல் வினா**

**3. தமயந்தி நளனுக்கு மாலையிட்டதும் பிற மன்னர்கள் முகம் எவ்வாறு மாறியது?**

1. ஒளிவீசும் முத்துமாலையை அணிந்த வெற்றிவேலனாகிய நளனுக்கு, வேல்போலும் கண்களையுடைய தமயந்தி மணமாலை சூட்டினாள்.
2. இதனைக் கண்ட வலியதோள்களையுடைய பிற மன்னர்களின் "செந்தாமரை மலர் போன்றிருந்த முகங்கள் ஏமாற்றத்தால் வெண்தாமரைப் போல வெளுத்தன".

## ஈ) நெடுவினாக்கள்

**1. தமயந்தியின் சுயம்வர நிகழ்வை விளக்குக.**

**சுயம்வர நிகழ்வுகள்** :

**சுயம்வரம் :**

தனக்கேற்ற மணமகனை உற்றார், உறவினர் முன்னிலையில் தன் மனம் விரும்பியவனுக்கு மாலையிட்டுத் தேர்ந்தெடுத்தல்.

**இளவரசர்களின் அறிமுகம் :**

தமயந்தியின் சுயம்வரத்திற்கு வந்த இளவரசர்களைத் தோழி, தமயந்திக்கு அறிமுகம் செய்யும் பொருட்டாக இவர் யதுகுல இளவரசர், இவர் குருநாட்டு இளவரசர், இவர் அவந்திநாட்டு இளவரசர், இவர் அங்கநாட்டு இளவரசர், இவர் கலிங்க நாட்டு இளவரசர் என்று அறிமுகப்படுத்தினாள்.

**தமயந்தியின் மனம் தடுமாற்றம்** :

தோழி, அரசர்களைப் பற்றிக் கூறியதைக் கேட்ட தமயந்தி, தேவர்கள் நால்வரும் நளனுருவில் வீற்றிருந்ததைக் கண்டு, அவர்களில் உண்மை நளன் யார்? என்று அறிய இயலாது தடுமாறினாள்.

**இறைவனிடம் வேண்டுதல் :**

தமயந்தி இறைவனிடம் " ஒளிசிந்தும் அழகிய மாலையணிந்த வீமராசன் குடியில் தோன்றிய உத்தமக்கன்னிப்பெண் என்பது உண்மையானால் அன்னப்பறவை தூதாய் சொன்ன நளனுக்கு மாலை சூட்ட அருள்புரிவாயாக" என வேண்டினாள்.

**உண்மை நளனை அறிந்தாள்** :

1. தேவர்களின் கண்கள் இமையாது, கால்கள் தரையில் படாது, சூடிய மாலைகள் வாடாது.
2. ஆனால் நளனின் கண்கள் மட்டும் இமைத்தன. கால்கள் பூமியில் தோய்ந்தன. சூடியிருந்த மாலைகள் வாடியிருந்தன. அவனே உண்மை நளன் என அறிந்து, தமயந்தி அவனுக்கு மாலை சூட்டினாள்.

**மன்னர்களின் முகங்கள் வெளுத்தன :**

சுயம்வரத்திற்கு வந்த தேவர்கள் நால்வரும் வெட்கமுற்று வருந்தினர். வலிய தோள்களையுடைய வேந்தர்களின் செந்தாமரை மலர்போலும் முகங்கள் வெண்தாமரை மலர்போல ஏமாற்றத்தால் வெளுத்தன.

**2. தோழி தமயந்திக்கு மன்னர்களை எவ்வாறு அறிமுகப்படுத்தினாள்?**

**சுயம்வரத்திற்கு வந்த அரசிளங்குமாரர்களைப்பற்றித் தோழி தமயந்திக்குப் பின்வருமாறு அறிமுகப்படுத்தினாள்:**

**1. யதுகுல மன்னன் சிறப்பு :**

1. எண்ணற்ற அரக்கர்களைக் கொன்று கறை படிந்த அம்புகளைக் கடல்நீரில் கழுவியவன்.
2. ஏழிசைச் சங்கத்துக்குத் தலைவனாக இருந்தவன்.
3. பாண்டவர்களுக்காக விண்ணுலகுக்குத் தூதுச் சென்றவன்.
4. பாரதப்போரின் வெற்றிக்குக் காரணமானவன்.

**2. குருநாட்டின் சிறப்பு :**

1. "செங்கழுநீர் அரும்பைப் பாம்பென்று கருதி நாரைக்குஞ்சு அழ, தாய்ப்பறவை அதை இரவெல்லாம் தாலாட்டிக் கொண்டிருக்கும்".
2. வள்ளைக்கொடிகள் மலிந்த இடமான குருநாட்டு இளவரசன் இவன்.

**3. அவந்தி நாட்டின் சிறப்பு :**

அழகிய குவளை மலர்களை எருமைக்கடாக்கள் உண்ண வரும் போது, அம்மலரில் இருந்த வண்டுகள் பண்ணிசைப்பதைக் கேட்டு எருமைக்கடாக்கள் மயங்கி நிற்பதற்கிடமான அவந்தி நாட்டு மன்னன் இவன்.

**4. அங்க நாட்டின் சிறப்பு:**

"சங்குப்பூச்சியின் குஞ்சுகள் பவளக்கொடியின் கொம்பினால் இடறுண்டு தேன் வழிந்தோடும் உப்பங்கழிகளில் வீழும். அவற்றிற்கு இரங்கி கடல் தன் அலைகளால் சங்குகளை அள்ளிவந்து கரையில் சேர்ப்பதற்கிடமான அங்கநாட்டு மன்னன் இவன்.

**5. கலிங்க நாட்டின் சிறப்பு:**

எருமைகள் தேன்சொரியும் தாமரைத் தடாகத்தைக் கலக்கும் போது வாளை மீன்கள் செந்தாமரைப் பூக்கள் மேல் பாய்கின்றன. அதனால் அதிலுள்ள வண்டுகளும், பறவைகளும் அஞ்சிப் பறக்கின்றன. இத்தகு தெளிந்த நீர் வளமுடையதற்கிடமான கலிங்க நாட்டு மன்னன் இவன். இவ்வாறாக சுயம்வரத்திற்கு வந்த அரசிளங்குமாரர்களைப்பற்றித் தோழி தமயந்திக்குப் அறிமுகப்படுத்தினாள்.

## இயல் 3 — உலகம் உள்ளங்கையில் — உரைநடைப்பகுதி

### அ) புறவயவினாக்கள்

**1. பிரித்து எழுதுக:**

| | விடைகள் |
|---|---|
| 1. இருபதாண்டு - --------------- | **1. இருபது + ஆண்டு** |
| 2. மின்னணுவியல் - -------------- | **2. மின் + அணு + இயல்** |
| 3. உள்ளங்கை - ------------- | **3. உள் + அம் + கை** |
| 4. மேம்பாடடைய - ------------- | **4. மேம்பாடு + அடைய** |
| 5. மின்னஞ்சல் - ------------- | **5. மின் + அஞ்சல்** |

**2. சேர்த்து எழுதுக :**

| | |
|---|---|
| 1. நுண் + அறிவு - --------- | **1. நுண்ணறிவு** |
| 2. இணையம் + தளம் - ---------- | **2. இணையதளம்** |
| 3. சிறுமை + ஊர் - --------- | **3. சிற்றூர்** |
| 4. பல்கலை + கழகம் - --------- | **4. பல்கலைக்கழகம்** |
| 5. தொலை + தொடர்பு - --------- | **5. தொலைத்தொடர்பு** |
| 6. கம்பி + சுருள் - ---------- | **6. கம்பிச்சுருள்** |

**3. கோடிட்ட இடங்களை நிரப்புக:**

| | |
|---|---|
| 1. இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கண்டுபிடிப்பு ------------- | **1. கணினி** |
| 2. 'கணினியின் தந்தை' என்றழைக்கப்படுபவர் --------------- | **2. சார்லஸ் பாப்பேஜ்** |
| 3. இணையம் என்ற வடிவத்திற்கு வித்திட்டவர் ------------- | **3. ஜான் பாஸ்டல்** |
| 4. தமிழ் எழுத்துக்களை எழுதவும் ஒலிக்கவும் கற்றுத்தரும் இணையத்தளம் ---------- | **4. தமிழம்** |

### ஆ) குறுவினாக்கள்

**1. கணினி யாரால் எப்போது கண்டறியப்பட்டது ?**

கி.பி.1833--இல் இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த சார்லஸ் பாப்பேஜ் என்பவரால் முதன் முதலில் கண்டறியப்பட்டது.

**2. கணினியின் வகைகள் யாவை ?**

1. பல்லூடக வசதி கொண்ட கணினி 2. மடிக்கணினி 3. கையடக்கக் கணினி

**3. இணையதள வசதியைப் பெறத் தேவையான பொருள்கள் யாவை ?**

1. கணினி
2. தொலைபேசி
3. இணையச் சேவை வழங்குநர்
4. மாற்றி
5. தொடர்பு மென்பொருள் - போன்றவையாகும்.

**4. 'முதல் செயல்திட்ட வரைவாளர்' எனப் போற்றப்படுபவர் யார்? ஏன்?**

1. 'முதல் செயல்திட்ட வரைவாளர்' எனப் போற்றப்படுபவர் ஆங்கிலக்கவிஞர் பைரனின் மகள் லேடி லவ்வேஸ் என்பவர்.
2. இவர் கணிதச் செயல்பாட்டிற்குத் தேவையான கட்டளைகளை வகுத்தமையால் இவ்வாறு போற்றப்படுகிறார்.

**5. ‘வையக விரிவு வலை’ குறிப்பு எழுதுக.**

1. இது பல செய்திகளை அழியாமல் பாதுகாக்கப் பயன்படுகிறது.
2. இதன் செயல்பாட்டால் இணைய இணைப்பு நான்கு வகைகளாகக் கிடைக்கிறது. உறுப்பினர் எண்ணிலக்க இணைப்பு, கம்பி வடமாற்றி, செயற்கைக்கோள் சேவை, கண்ணறைச்சேவை என நான்கு வகைகளில் கிடைக்கின்றது.

## இ) சிறுவினாக்கள்

**1. இணையம் - குறிப்பு எழுதுக.**

**1. வையக விரிவு வலை :**

இணையம் என்னும் வடிவத்திற்கு வித்திட்டவர் ‘ஜான் பாஸ்டல்’. உலகெங்கும் உள்ள கணினிச் செய்திகளை இணைக்க இணையம் உதவுகிறது. இதனை **‘வையக விரிவு வலை’** என வழங்குவர். இது பல செய்திகளை அழியாமல் பாதுகாக்கவும் பயன்படுகிறது.

**2. இணையத்தின் பயன்பாடு:**

இணையத்தின் மூலம் தொலைதூரக்கல்வியைப் பெறமுடியும். இணையத்தின் மூலம் ஒருவருக்கு ஏற்படும் ஐயங்கள், சிக்கல்கள், தேவைகள், வழிகாட்டுதல்கள் முதலியவற்றுள் தீர்வுகளைப் பெறவியலும். வீட்டிலிருந்தபடியே நேருக்கு நேர் தொடர்புகொண்டு கற்கும் வாய்ப்பும் கிடைக்கின்றது.

**3. இணைய இணைப்பு வகைகள் :**

வையக விரிவு வலை செயல்படுவதைக் கொண்டு, உறுப்பினர் எண்ணிலக்க இணைப்பு, கம்பி வடமாற்றி, செயற்கைக்கோள் சேவை, கண்ணறைச் சேவை என நான்கு வகைகளில் கிடைக்கின்றது.

**2. கணினி வாயிலாக மொழிக்கல்வி எவ்வாறு பெற இயலும் ?**

1. கணினி வாயிலாக மொழிக்கல்வியும் பெறவியலும்.
2. அடிப்படைத் திறன்களான கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல், எனத் தொடங்கி கதை, கட்டுரை, செய்யுள், பாடல், கடிதம், சுருக்கி வரைதல், விரித்தெழுதுதல், குறிப்பெடுத்தல், அகராதி தேடல், என அனைத்தையும் கற்க இயலும்.
3. தமிழம் என்னும் இணையம் தமிழ் எழுத்துக்களை எழுதவும், ஒலிக்கவும், கற்றுத் தருகிறது.
4. தற்போதைய கற்பித்தல் சூழலில் தொடக்க வகுப்புகளிலிருந்து கணினிப்பாடம் நடத்தப்படுகிறது.

**3. கணினியின் பயன்களைக் குறிப்பிடுக.**

**1. பல்துறையில் பயன்படுகிறது:-**

வணிகம், அறிவியல், தொழில்நுட்பம், தொலைத்தொடர்பு, கல்வி, மருத்துவம், விண்வெளி, பாதுகாப்பு முதலிய பல்துறைகளில் பயன்பட்டு வருகிறது.

**2. அரிய பணியை எளிமையாகச் செய்கிறது:-**

சொல் விளையாட்டு, பொறியியல் வரைபடம் வரைதல், பொழுதுபோக்கு விளையாட்டுகள், கணினித் தேற்றங்களின் தீர்வுகள் போன்ற அரிய பணிகளையும் எளிமையாகச் செய்கிறது.

**3. எங்கும் கணிணியின் ஆட்சி:-**

பேருந்து நிலையங்கள், வங்கிகள், கல்வி நிலையங்கள், உணவகங்கள், எவ்விடத்தும் கணினியின் ஆட்சியே. வேலைவாய்ப்புகளை விரிவுப்படுத்தி வாழ்க்கைத் தரத்தை உயர்த்துகிறது.

## ஈ) நெடுவினா

**1. கணினியின் தோற்றமும், வளர்ச்சியும் பற்றி எழுதுக.**

**1. கணினியின் முதற்படிவம் :-**

கணினி உருவாக முதல் படிவமாக, கணக்கிடுவதற்காக முதலில் எளிதான மணிச்சட்டம் உருவாக்கப்பட்டது. இக்கருவியைப் பாரிசு நகரைச் சார்ந்த பிளேஸ் பாஸ்கல் என்னும் அறிஞர் கண்டறிந்தார்.

**2. கணினி உருவாகக் காரணமானவர்களின் பங்கு :-**

இங்கிலாந்து நாட்டைச் சார்ந்த சார்லஸ் பாப்பேஜ் கி.பி 1833- இல் கணினியை முதன்முதலில் வடிவமைத்தார். ஆங்கிலக் கவிஞர் பைரனின் மகள் லேடி லவ்வேஸ் கணிதச் செயல்பாட்டிற்குத் தேவையான கட்டளைகளை வகுத்தார்.

**3. எண்ணிலக்கக் கணினியின் கண்டுபிடிப்பு:-**

1. மின்னியல் துறையில் ஏற்பட்ட வளர்ச்சியால், ஹார்வார்டு பல்கலைக்கழகக் கணிதப்பேராசிரியர் ஹோவார்டு ஐக்கன் என்பார். ஐ.பி.எம் பொறியாளர் துணையுடன் எண்ணிலக்கக் கணினியைக் கண்டறிந்தார்.
2. இதற்கு, **ஹார்வார்டு மார்க்-1** எனப் பெயரிட்டனர்.
3. தற்போது அமெரிக்காவும், ஜப்பானும் மீத்திறன் கணினியை உருவாக்கப் போட்டியிடுகின்றன.

4. **கணினியின் வகைகள் :-**
    1. தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியின் விளைவாகப் பல்லூடக வசதி கொண்ட கணினி, மடிக்கணினி, கையடக்கக் கணினி, முதலிய கணினிகள் வந்துவிட்டன.
    2. கணினியுடன் இணையதள இணைப்பும் வளர்ச்சியடைந்துள்ளது. 'வலைப்பின்னல் எனப்பட்ட வையக விரிவு வலையமைப்பும் பெரிதும் வளர்ந்துள்ளது.

**2. தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியில், கணினியின் பங்கை விளக்குக.**

**தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியில் கணினியின் பங்கு:-**

தொலைத் தொடர்புத்துறையில் ஈராயிரம் ஆண்டுகளில் ஏற்பட்ட முன்னேற்றத்தினைக் காட்டிலும் கடந்த இருபது ஆண்டுகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் பலநூறு மடங்காகும்.

1. **இணையத்தின் பங்கு :-**
    1. ஒருவரை நேரடியாய்ப் பார்க்காமலேயே மின்னணுத்தகவல் வாயிலாய்த் தொடர்புக்கொள்ள முடிகிறது. வீட்டிலிருந்தபடியே உலகத்தைப் பற்றிய செய்திகளைப் பார்க்கவும், பழக, மகிழ, இன்னபிற செய்திகளை அறியவும் இணையம் உதவுகிறது.
    2. கணினி வல்லுநர் பில்கேட்ஸ் தன் இருபதாண்டுக் கணினிப் பயணத்தில் இணையத்தின் பங்கு மிகச்சிறந்தது என்கிறார்.
2. **உலகத்தொடர்பிற்குச் சிறந்த வாயில் கணினி :-**
    1. தொழில்நுட்ப உத்திகளைப் பயன்படுத்தி கணினிவழியாகத் தேவையான தகவல்களைப் பெறமுடியும்.
    2. இந்நூற்றாண்டின் இணையற்ற கண்டுபிடிப்பான கணினி, அறிவை வளர்த்துக் கொள்ளவும், உலகத் தொடர்பிற்கும் சிறந்த வாயிலாக உள்ளது.
3. **உள்ளங்கையில் உலகம் :-**

    அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியின் புதுமைகளாகப் புகுத்தப்பட்டுள்ள கணினியும், இணையதளமும், தொலைத்தொடர்புக் கருவிகளும் உலகத்தையே நம் உள்ளங்கைகளில் கொண்டு வந்துள்ளன.

## இயல் 3 | ஆவணம் | துணைப்பாடப்பகுதி

### நெடு வினா

**1. மரியாதைராமன் நீதி வழங்கிய திறத்தை ஆவணம் கதை வாயிலாக விளக்குக.**

1. முன்னுரை
2. நீதிபதி மரியாதைராமனிடத்தில் வந்த வழக்கு
3. உழவன் ஆவணத்தை கிழித்துத் தீயிலிட்டான்
4. உழவனின் பொய்யுரை
5. நீதிபதி மரியாதைராமனின் யோசனை
6. தன்னை அறியாமல் உண்மை உரைத்தான்
7. நீதிபதியின் தீர்ப்பு
8. முடிவுரை.

**1. முன்னுரை:**

ஆவணம் - என்ற இக்கதையானது வாழ்க்கையில் எந்தச் சூழ்நிலையிலும் தன்னிலை மறவாது,பொய்யுரையாமல் பிறர் பொருளுக்கு ஆசைப்படாமல் இருத்தல் வேண்டும். பேராசையினால் பொய் கூறிய உழவனுக்கு ஏற்பட்ட நிலையை ஆவணம் என்ற இக்கதையின் மூலம் அறியலாம்.

**2. நீதிபதி மரியாதைராமனிடத்தில் வந்த வழக்கு :-**

ஓர் ஊரில் நிலக்கிழார் ஒருவர் இருந்தார். அவரிடத்தில் உழவன் ஒருவன், ஆவணம் எழுதிக் கொடுத்து ஐயாயிரம் பணம் பெற்றான். தவணை நாள் முடிந்த பின், பணத்தைத் திருப்பி தருமாறு கேட்டார். உழவன் பணம் தருவதாகக் கூறி, தன்னை ஏமாற்றிவிட்டதாக நீதிபதி மரியாதைராமனிடத்தில் முறையிட்டார்.

**3. உழவன் ஆவணத்தைக் கிழித்துத் தீயிலிட்டான் :-**

உழவன் தான் எழுதிக்கொடுத்த ஆவணத்துடன் தன் களத்துமேட்டுக்கு வந்தால் தான் பணத்தைத் தருவதாகக் கூறினான். நிலக்கிழார் அங்கே சென்றார். நிலக்கிழாரிடமிருந்த ஆவணத்தை வாங்கிப் பார்ப்பது போல் நடித்துப் பின் ஆவணத்தைக் கிழித்து தீயிலிட்டான்.

**4. உழவனின் பொய்யுரை :-**

நீதிபதி மரியாதைராமன் வழக்கை விசாரித்துவிட்டு, அவ்வுழவனிடம், " நீ என்ன சொல்கிறாய்?" என்று கேட்டார். அதற்கு உழவன், "நான் ஆவணம் எழுதிக்கொடுக்கவும் இல்லை. ஆவணத்தைக் கண்ணால் கூடக் கண்டதும் இல்லை. வேண்டுமென்றே தன் மீது வீண்பழி சுமத்துகிறார் எனப் பொய்யுரைத்தான்.

5. **நீதிபதி மரியாதைராமனின் யோசனை :-**
நீதிபதி வழக்கை மறுநாளுக்கு தள்ளிவைத்தார். உழவன் சென்ற பிறகு நிலக்கிழாரை அழைத்து, ''கடன் ஆவணம் எவ்வளவு நீளம் இருக்கும்?'' என்று கேட்க, ''அரையடி நீளம் இருக்கும்!'' என்றார். ''நாளை நீதிமன்றத்தில் கேட்கும் பொழுது ஆவணம் ஓர் அடி நீளம் இருக்கும் எனச் சொல்ல வேண்டும்'' எனக் கூறி நிலக்கிழாரை அனுப்பி வைத்தார் நீதிபதி.

6. **தன்னை அறியாமல் உண்மை உரைத்தான் :-**
மறுநாள் நிலக்கிழாரைப் பார்த்து நீதிபதி, ''ஆவணம் எவ்வளவு நீளம் இருந்தது?'' என்று கேட்க, அவர், '' ஓர் அடி நீளம் இருந்தது'' என்றார். அதைக் கேட்ட உழவன் தன்னை மறந்து, '' ஆவணம் அரையடி நீளமே இருக்கும். நிலக்கிழார் பொய் சொல்வதாக உண்மையைக் கூறினான் உழவன்.

7. **நீதிபதியின் தீர்ப்பு :-**
உழவனைப் பார்த்து நீதிபதி, **ஆவணம்** எப்படி இருக்குமென்று தெரியாது எனக் கூறிய நீ, இப்பொழுது அரையடி நீளம் இருக்கும் எனக் கூறி உண்மையை வெளிப்படுத்திவிட்டாய். எனவே, நீ இவருக்கு வட்டியும், முதலுமாக செலவுத் தொகையுடன் சேர்த்துக் கொடுக்கவும், ஆவணத்தைக் கிழித்த குற்றம் நீதிமன்றத்தில் பொய் கூறிய குற்றம் ஆகிய இரண்டுக்கும் சேர்த்து ஆறுமாதம் கடுங்காவல் தண்டனை அளித்துத் தீர்ப்பளித்தார்.

8. **முடிவுரை :-**
''ஆத்திரக்காரனுக்குப் புத்திமட்டு''- என்ற பழமொழி ஆவணம் என்ற இக்கதையின் உழவனுடைய செயல்களினால் உண்மையாயிற்று, என்பதை அறியலாம்.

## இயல் 3 — இயல்பு வழக்கு, தகுதி வழக்கு — இலக்கணப்பகுதி

### அ) புறவயவினாக்கள்

**1. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. 'சிவிறி' என்பதை 'விசிறி' எனக் கூறுவது -------------- வழக்கு. — **1. இலக்கணப்போலி**
2. இறந்தாரை 'இறைவனடி சேர்ந்தார்' என்பது ------------- வழக்கு. — **2. மங்கல**
3. 'விளக்கைக் குளிர வை' என்பது -------------- வழக்கு. — **3. மங்கல**

**2. பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| 1. இலக்கணமுடையது | - கோவை | - | **நிலம்** |
| 2. இலக்கணப்போலி | - நிலம் | - | **புறநகர்** |
| 3. மரூஉ | - புறநகர் | - | **கோவை** |

**3. பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| 1. இடக்கரடக்கல் | - பறி | - | **கால் கழுவி வந்தான்** |
| 2. மங்கலம் | - கால் கழுவி வந்தான் | - | **இறைவனடி சேர்ந்தார்** |
| 3. குழுஉக்குறி | - இறைவனடி சேர்ந்தார் | - | **பறி** |

### ஆ) குறுவினாக்கள்

1. **வழக்கு என்றால் என்ன?**
நம் முன்னோர்கள் எந்தெந்தப் பொருள்களை எந்தெந்தச் சொற்களால் வழங்கினார்களோ, அதனை அப்படியே வழங்குவது வழக்கு என்று பெயர்.

2. **வழக்கு எத்தனை வகைப்படும்? அவை யாவை?**
வழக்கு இரண்டு வகைப்படும். அவையாவன : 1. இயல்புவழக்கு 2. தகுதி வழக்கு ஆகும்.

3. **இலக்கணப்போலியைச் சான்றுடன் விளக்குக.**

| **இலக்கணமுடைய சொற்கள்** | - | **இலக்கணப்போலி** |
|---|---|---|
| நகர்ப்புறம் | - | புறநகர் |
| கால்வாய் | - | வாய்க்கால் |
| கொம்பு நுனி | - | நுனிக்கொம்பு |

புறநகர், வாய்க்கால், நுனிக்கொம்பு இலக்கண முறைப்படி பொருந்தாவிட்டாலும், நம் முன்னோர்கள் இலக்கணமுடையது போல் வழங்கி வருவதையே 'இலக்கணப்போலி' என்கிறோம்.

**4. மரூஉ என்பது யாது? சான்று தருக?**

**'தஞ்சாவூர், கோயம்புத்தூர்'** என்பவை வழக்கில் சிதைந்து **'தஞ்சை, கோவை'** என வழங்கப்படுபவை. இவ்வாறு இலக்கணம் சிதைந்து, சொல்லின் வடிவம் மாறி வழங்கும் திரிந்த சொற்கள் **'மரூஉ'** எனப்படும்.

**சான்று :**

| இலக்கணமுடைய சொற்கள் | | மருவி வழங்குவது |
|---|---|---|
| தஞ்சாவூர் | - | தஞ்சை |
| கோயம்புத்தூர் | - | கோவை |
| காஞ்சிபுரம் | - | காஞ்சி |
| திருச்சிராப்பள்ளி | - | திருச்சி |

**5. மங்கலம் என்றால் என்ன? விளக்குக.**

**மங்கலம் :** அமங்கலமான சொல்லை நீக்கி மங்கலமான சொல்லால் அப்பொருளை விளக்குவது 'மங்கலம்' என்பர்.
**சான்று :-** **'இறந்தாரை' 'இறைவனடி சேர்ந்தார்'** எனக் கூறுதல். **'சுடுகாட்டினை' 'நன்காடு'** எனக் கூறுதல்.

## இயல் 3 — மரபுத்தொடர்கள் — மொழித்திறன்பகுதி

**1. பொருத்தமான மரபுச்சொல்லைத் தேர்ந்தெழுதுக.**

அ) குமரன் பழம் ......... (உண்டான், **தின்றான்**)
ஆ) காலையில் சேவல் ...... (**கூவியது**, கத்தியது)
இ) ஆட்டு ............ (கூட்டம், **மந்தை**) வருகிறது.
ஈ) எங்கள் ஊரில் வாழைத் ....... (**தோட்டம்**, தோப்பு) உள்ளது.
உ) குயில்.......... (**கூவியது**, அகவியது)

**2. கீழுள்ள பெயர்களுக்கு உரிய இளமைப்பெயர்களை எழுதுக.**

| | | விடைகள் |
|---|---|---|
| அ) கீரி | - | கீரிப்பிள்ளை |
| ஆ) மான் | - | மான்கன்று |
| இ) சிங்கம் | - | சிங்கக்குருளை |
| ஈ) பூனை | - | பூனைக்குட்டி |
| உ) எருமை | - | எருமைக்கன்று |

**3. பொருத்துக.**

| | | விடைகள் |
|---|---|---|
| அ) மக்கள் | - | கூட்டம் |
| ஆ) வீரர் | - | படை |
| இ) விறகு | - | கட்டு |
| ஈ) சுள்ளி | - | கற்றை |
| உ) வைக்கோல் | - | போர் |

**4. எண்ணுப்பெயர்களைத் தமிழெண்களுடன் பொருத்துக.**

| | | விடைகள் |
|---|---|---|
| 1. பன்னிரண்டு | - | **க௨** |
| 2. ஒன்பது | - | **௯** |
| 3. ஐந்து | - | **ரு** |
| 4. பதினைந்து | - | **கரு** |
| 5. பதின்மூன்று | - | **க௩** |

**5. கட்டுரைப்பயிற்சி:**

## நுகர்வோர் பாதுகாப்பு

1. முன்னுரை
2. நுகர்வோர்
3. நுகர்வோர் பாதுகாப்பு
4. நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம்
5. நுகர்வோர் விழிப்புணர்வு
6. முடிவுரை

**1. முன்னுரை:**

சமூக வாழ்க்கை சிக்கலின்றி அமைய சட்டங்கள் வழிவகுக்கின்றன. இச்சட்டங்கள் பலவகைப்படும். இவற்றுள் குறிப்பிடத்தக்க ஒன்று நுகர்வோர் பாதுகாப்புச்சட்டம் ஆகும். அதைப்பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**2. நுகர்வோர்**

நுகர்வோர் என்போர் யார்? தமது தேவைக்காகவும் வசதிக்காகவும் மகிழ்ச்சிக்காகவும் பணம் செலுத்திப் பொருள்களையும் சேவைகளையும் பெறுகின்ற பொதுமக்களே நுகர்வோர் ஆவர்.

**3. நுகர்வோர் பாதுகாப்பு**

நுகர்வோர் வாங்கும் பொருட்களின் தரம், எடை, அளவு ஆகியவற்றில் குறைபாடுகள் இன்றி இருக்கவேண்டும். அதேபோல் வங்கி, நிதிநிறுவனம், போக்குவரத்து, மின்சாரம், தொலைபேசி போன்ற சேவைகளிலும் குறைபாடுகள் இன்றி இருக்கவேண்டும். தரமான சேவைகளும் தரமான பொருட்களும் கிடைக்கப்பெறுவதே நுகர்வோர் பாதுகாப்பு ஆகும்.

**4. நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம்**

நுகர்வோர் வாங்கும் பொருட்களிலும் சேவைகளிலும் ஏற்படும் குறைபாட்டைத் தடுப்பதும் உரிய இழப்பீடுகளைப் பெற்றுத்தருவதுமே நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் நோக்கமாகும். நுகர்வோர் பாதுகாப்பு அமைப்புகள் பல்வேறு மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றன. மாவட்ட அளவிலும் மாநில அளவிலும் தேசிய அளவிலும் நுகர்வோர் நீதிமன்றங்கள் தனியாக உள்ளன. அவற்றை அணுகி நுகர்வோர் தம் உரிமையை நிலைநாட்டிக் கொள்ளலாம்.

**5. நுகர்வோர் விழிப்புணர்வு**

நுகர்வோர் தாம் வாங்கும் பொருட்களுக்கு உரிய விற்பனைச் சீட்டு பெற வேண்டும். உத்திரவாத சீட்டுகளை முறையாக நிரப்பி விற்பனையாளரின் கையொப்பம் மற்றும் முத்திரைகளைப் பெற வேண்டும். அப்போதுதான் உரிய நிவாரணம் பெற முடியும். நுகர்வோர் நீதிமன்றங்களில் தொடரப்படும் வழக்கிற்கான செலவுத் தொகையையும் சேர்த்து நாம் இழப்பீடாகப் பெறமுடியும்.

**6. முடிவுரை:**

நாம் ஒவ்வொருவருமே நுகர்வோர்கள்தான். எனவே நுகர்வோருக்கான உரிமைகளையும் சட்டங்களையும் அறிந்திருக்க வேண்டியது நமது கடமை ஆகும். சட்டத்தின் பாதுகாப்பில் நாம் மகிழ்ச்சியாக வாழமுடியும்.

## வளரறி செயல்பாடுகள்

**6. கீழ்க்காணும் உரைப்பத்தியைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்க.**

‘தென்றல் அசைந்து வரும் தென்தமிழ்நாட்டில் அமைந்த திருக்குற்றாலம், மலைவளம் படைத்த பழம்பதியாகும்.அம்மலையிலே கோங்கும், வேங்கையும் ஓங்கி வளரும். குரவமும் முல்லையும் நறுமணங்கமழும். கோலமயில் தோகை விரித்தாடும். தேனுண்ட வண்டுகள் தமிழ்ப்பாட்டிசைக்கும். அத்தகைய மலையினின்று விரைந்து வழிந்து இறங்கும் வெள்ளருவி வட்டச்சுனையிலே வீழ்ந்து பொங்கும்பொழுது சிதறும் நீர்த்திவலைகள் பாலாவிபோற் பரந்து எழுந்து மஞ்சினோடு சேர்ந்து கொஞ்சிக் குலாவும். வேனிற்காலத்தில் திருக்குற்றால மலையில் வீசும் மெல்லிய பூங்காற்று மருந்துச்செடிகொடிகளின் நலங்களைக் கவர்ந்து வருதலால், நலிந்த உடலைத் தேற்றும் நன்மருந்தாகும்.

**வினாக்கள்:**

1. தென்தமிழ்நாட்டில் மலைவளம் படைத்த பழம்பதி எது? **திருக்குற்றாலம்**
2. உரைப்பத்தியில் இடம்பெற்றுள்ள மரங்களின் பெயர்களைக் கூறுக. **கோங்கு, வேங்கை**
3. தமிழ்ப்பாட்டிசைக்கும் உயிரினம் எது? **வண்டு**
4. அருவியினின்று சிதறும் நீர்த்திவலைகளுக்குக் கூறப்பட்ட உவமை யாது? **பால் ஆவி**
5. திருக்குற்றால மலையில் வீசும் மெல்லிய பூங்காற்றின் பயன் யாது? **நலிந்த உடலைத் தேற்றுதல்**

**7. கீழ்க்காணும் சொற்களை அகரவரிசைப்படுத்தி எழுதுக.**

பாடம், மன்றம், பட்டம், மாந்தளிர், மௌனம், பிரிவு, மிதவை, பீலி, மீளாய்வு, புதுமை, முல்லை, பூவிழி, மூதுரை, பெருமை, மென்மை, பேழை, மேம்பாடு, பைந்தழை, மைவிழி, பொறுமை, மொட்டு, மோனை, போட்டி, பௌவம்

**ப வரிசை:**

**ப**ட்டம், **பா**டம், **பி**ரிவு, **பீ**லி, **பு**துமை, **பூ**விழி, **பெ**ருமை, **பே**ழை, **பை**ந்தழை, **பொ**றுமை, **போ**ட்டி, **பௌ**வம்.

**ம வரிசை:**

**ம**ன்றம், **மா**ந்தளிர், **மி**தவை, **மீ**ளாய்வு, **மு**ல்லை, **மூ**துரை, **மெ**ன்மை, **மே**ம்பாடு, **மை**விழி, **மொ**ட்டு, **மோ**னை, **மௌ**னம்.

**8. கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிக்க.**

1. நாம் பயன்படுத்தும் ஊடகங்களின் பெயர்களைக் கூறுக.
   **தொலைபேசி, வானொலி, தொலைக்காட்சி, கைப்பேசி, கணினி**
2. ஊடகங்களின் பயன்களுள் இரண்டனைக் கூறுக.
   **1. செய்திகளை அறிதல் 2. செய்திகளைப் பெறுதல்**
3. சைபர் குற்றம் என்பது யாது?
   **மக்கள் தொடர்பு ஊடகங்கள் பிறர் பற்றிய தவறான செய்தி அனுப்புதல்**
4. சைபர் குற்றங்களுள் இரண்டனைக்கூறுக.
   **1. ஒருவர் ஒப்புதல் இல்லாமல் புகைப்படம் வெளியிடுதல் 2. பிறர் ஒப்புதலின்றி புகைப்படமெடுத்தல்**
5. ஊடகத்தின் வாயிலாகத் தவறான செய்தி பரவும்போது. நாம் செய்ய வெண்டியது என்ன?
   **விழிப்புணர்வுடன் இருந்து நம்மை நாமே பாதுகாத்துக்கொள்ள வேண்டும்.**

**9. பல பொருள் தரும் ஒரு சொல்லைப் பொருத்துக.**

1. உள்ளம், வீடு, இடம் - **அகம்**
2. மாதம், கிழமை, சந்திரன் - **திங்கள்**
3. அழகு, நகை, வரிசை - **அணி**
4. கதிரவன், வெளிச்சம், விளக்கு - **ஒளி**
5. மேன்மை, இலக்குமி, செல்வம், மரியாதைஅடை - **திரு**

**10. கீழ்க்காணும் பாடலைப் படித்து பொருளுணர்ந்து, வினாக்களுக்கு விடையளிக்க.**

கிளையினிற் பாம்பு தொங்க
விழுதென்று குரங்கு தொட்டு
விளக்கினைத் தொட்ட பிள்ளை
வெடுக்கெனக் குதித்ததைப் போல்
கிளைதோறும் குதித்துத் தாவி
கீழுள்ள விழுதையெல்லாம்
ஒளிப்பாம்பாய் எண்ணி யெண்ணி
உச்சிபோய்த் தன்வால் பார்க்கும்

**- பாரதிதாசன். அழகின் சிரிப்பு**

**வினாக்கள்:**

1. பாடலில் குறிப்பிடப்படும் மரம் எது? **ஆலமரம்**
2. குரங்கு விழுதென்று எதனைத் தொட்டது? **பாம்பு**
3. பாடலில் இடம்பெற்றுள்ள உவமை யாது? **விளக்கினைத் தொட்ட பிள்ளை**
4. குரங்கு தன் வாலை என்னவென்று நினைத்தது? **ஒளிப்பாம்பு**
5. பிள்ளை என்னும் பொருள்தரும் சொற்கள் இரண்டனைக் கூறுக. **குழந்தை, மகன்**

**11. கீழ்க்காண்பனவற்றுள் தொகைச்சொல்லினை எழுதுக.**

| தொகைச்சொல்லின் விரி | தொகைச்சொல் |
|---|---|
| 1. சேர, சோழ, பாண்டியர் | மூவேந்தர் |
| 2. எழுத்து, சொல், பொருள்,யாப்பு, அணி | ஐந்திலக்கணம் |
| 3. கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு | நாற்றிசை |
| 4. இனிப்பு, கசப்பு, புளிப்பு, கார்ப்பு, துவர்ப்பு, உவர்ப்பு | அறுசுவை |
| 5. சிலப்பதிகாரம்,மணிமேகலை | இரட்டைக் காப்பியங்கள் |
| 6. மா, பலா, வாழை | முக்கனி |

**12. கீழ்க்காணும் கணினி பயன்பாட்டுச் சொற்களை உரிய சொற்களுடன் இணைத்தெழுதுக.**
(கணினித்திரை, வன்பொருள், விசைப்பலகை, மென்பொருள், இணையதளம், இருநிலை எண்மொழி, பல்லூடக விளையாட்டுகள், தேடுபொறிகள், மின்னஞ்சல், கருத்துப்பரிமாற்றம், எழுத்துரு, பதிவிறக்கம், மாற்றுவிசைக்குமிழி, உலகளாவிய வலைப்பின்னல், குறுந்தட்டு, செய்தித்தொகுப்பு)

| பாண்ட் | எழுத்துரு | பாண்ட் | எழுத்துரு |
|---|---|---|---|
| கீ போர்டு | விசைப்பலகை | ஈ மெயில் | மின்னஞ்சல் |
| மல்டி மீடியா கேம்ஸ் | பல்லூடக விளையாட்டுகள் | டேட்டா பேஸ் | செய்தித்தொகுப்பு |
| இண்டர்நெட் | இணையதளம் | பைனாரி லாங்குவேஜ் | இருநிலை எண்மொழி |
| வேர்ல்ட் வொய்ட் வெப் | உலகளாவிய வலைபின்னல் | மானிட்டர் | கணினித்திரை |
| ஷிப்ட் கீ | மாற்றுவிசைக்குமிழி | சாப்ட் வேர் | மென்பொருள் |
| ஹார்டுவேர் | வன்பொருள் | வெப் சர்ச் என்ஜின் | தேடுபொறிகள் |
| பிளாப்பி டிஸ்க் | குறுந்தட்டு | டவுன்லோட் | பதிவிறக்கம் |
| | | சாட்டிங் | கருத்துப்பரிமாற்றம் |

**13. அழகு என முடியும் எட்டு வரிப்பாடல் எழுதுக.**

நாட்டுக்கு வளமை அழகு
வீட்டுக்குத் தூய்மை அழகு
கருத்துடைய பேச்சு அழகு
கான மயிலிற்குத் தோகை அழகு
எழுத்துக்கு அணி அழகு
செடிக்குப் பூ அழகு
புல்லிற்குப் பனி அழகு
குழந்தைக்குச் சிரிப்பு அழகு

**14. ஆனாலும் எனும் இணைப்புச்சொல்லைப் பயன்படுத்திப் பழமொழிகளை எழுதுக.**
1. எலி **வளையானாலும்** தனி வளை வேண்டும். 2. ஓட்டைச் **சட்டியானாலும்** கொழுக்கட்டை வெந்தால் சரி.
3. ஒடிந்த **கோலானாலும்** ஊன்றுகோல் வேண்டும். 4. கடுகளவு **நெருப்பானாலும்** போரைக் கொளுத்திவிடும்.
5. சுடர் **விளக்கானாலும்** தூண்டுகோல் வேண்டும்.

## கற்றலடைவு சிறுமதிப்பீடு

**1. கோடிட்ட இடத்தை நிரப்புக.** **5x1=5**

அ) திருவள்ளுவமாலையை இயற்றியவர் ............ **53 புலவர்கள்**
ஆ) திருவள்ளுவமாலையில் உள்ள பாடல்களின் எண்ணிக்கை ......... **55**
இ) திருவள்ளுவமாலையில் ‘தினையளவு’ என்னும் பாடலை இயற்றியவர் ...... **கபிலர்**
ஈ) நளவெண்பாவை இயற்றியவர் ......... **புகழேந்தி**
உ) புகழேந்தி புலவரை ஆதரித்த வள்ளல் ...... **சந்திரன் சுவர்க்கி**

**2. ஓரிரு சொற்களில் விடையளிக்க.** **5x1=5**

அ) சுயம்வரம் என்பது யாது? **தனக்கேற்ற மணமகனைத் தானே தேர்ந்தெடுத்தல்**
ஆ) புகழேந்திப்புலவர் வாழ்ந்த காலத்தைகூறுக. **கி.பி. 12ம் நூற்றாண்டு**
இ) தமயந்தி, யாருக்கு மாலையிட விரும்பினாள்? **நளன்**
ஈ) நளவெண்பாவில் குறிப்பிடப்படும் அங்கநாட்டின் வளம் யாது? **கடல்வளம்**
உ) ‘வெண்பாவிற் புகழேந்தி’ எனப் புகழேந்தி புலவர் போற்றப்பட காரணம் யாது?
**வெண்பா யாப்பில் தொடர்நிலைச்செய்யுள் பாடியதால்**

## தொகுத்தறி மதிப்பீடு
## முதல் பருவத் தேர்வு

8-ம் வகுப்பு மதிப்பெண்கள் - 60

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **5x1=5**

1. திருக்குறள் …….நூல்களுள் ஒன்று.
   அ) பதினெண் கீழ்க்கணக்கு ஆ) எட்டுத்தொகை இ) பத்துப்பாட்டு
2. இனியவை நாற்பது நூலின் ஆசிரியர் ……….
   அ) கபிலர் ஆ) பூதஞ்சேந்தனார் இ) சச்சிதானந்தன்
3. குழவி என்பதன் பொருள் ………..
   அ) ஒருவகைக் குருவி ஆ) ஒருவகைத் தேனீ இ) குழந்தை
4. புதுக்கவிதைக்கு வித்திட்டவர் ……..
   அ) பாரதிதாசன் ஆ) பாரதியார் இ) கம்பர்
5. இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கண்டுபிடிப்பு ………..
   அ) வானொலி ஆ) தொலைக்காட்சி இ) கணினி

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக.** **5x1=5**

6. தாயுமானவர் பிறந்த ஊர் ……..
7. திருக்குறளின் பெருமையை விளக்கும் நூல் …….
8. வீரமாமுனிவரின் இயற்பெயர் ……….
9. நளவெண்பாவை இயற்றியவர் ………..
10. கணினியின் தந்தை என்றழைக்கப்படுபவர் ……….

**III. பொருத்துக.** **5x1=5**

11. நிலம் - பிள்ளை
12. பதினைந்து - ஆய்தத் தொடர் குற்றியலுகரம்
13. க∴சு - பறி
14. கீரி - பெயர் இயற்சொல்
15. குழுஉக்குறி - கரு

**IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** **5x1=5**

16. இலக்கியம் - பிரிக்கும் முறை
   அ) இல+கியம் ஆ) இலக்கிய+இம் இ)இலக்கு+இயம்
17. இளமையில் கல்
   அ) வினாத்தொடர் ஆ) கட்டளைத்தொடர் இ) செய்தித்தொடர்
18. **கோடிட்ட இடத்தில் உரிய குற்றியலுகரச் சொற்களை எழுதி நிரப்புக.**
   அ) பொற்கொடி பூக்களை ………… வந்தாள்.
   ஆ) குயவர் பானையை …………. கொண்டிருந்தார்.
19. **பொருத்தமான மரபுச்சொல்லைத் தேர்ந்தெழுதுக.**
   அ) குயில் ………….. (கூவியது, அகவியது)
   ஆ) ஆட்டு …………. (கூட்டம், மந்தை) வருகிறது.
20. **கீழ்க்காணும் தொடர்களில் அடிக்கோடிட்ட சொற்களுள் ‘இல்’ அல்லது ‘உள்’ என்னும் சொற்களை இணைத்து எழுதுக.**
   அ) திருக்குறள் அறநூல்கள் ஒன்று.
   ஆ) பறவைகள் மரம் கூடு கட்டியிருந்தது.

**V. எவையேனும் மூன்றனுக்கு விடையளி.** **3x3=9**

21. திருவள்ளுவருக்கு வழங்கும் வேறுபெயர்கள் யாவை?
22. தமிழுக்கு தொண்டாற்றிய தமிழறிஞர் நால்வரின் பெயர்களை எழுதுக.
23. செய்தித் திரட்டலுக்கு உதவும் இன்றியமையாத ஆறுவினாக்கள் யாவை?
24. கணினி யாரால், எப்போது கண்டறியப்பட்டது?
25. எவையெல்லாம் வேண்டா எனக் கவிஞர் சச்சிதானந்தன் குறிப்பிடுகிறார்?

**VI. எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடையளி.** **2x3=6**

26. செய்திகளைப் பெறும் வாயில்கள் யாவை?
27. பாரதியும் பாரதிதாசனும் திருவள்ளுவரை எவ்வாறு சிறப்பித்துள்ளனர்?
28. கணினி வாயிலாக மொழிக்கல்வி எவ்வாறு பெற இயலும்?
29. தமயந்தி நளனை எவ்வாறு கண்டறிந்தாள்?

**VII. அடிபிறழாமல் எழுதுக.** **4+2+2=8**

30. “முத்தே பவளமே” – எனத்தொடங்கும் வாழ்த்துப்பாடல்
31. புணர்ச்சி – எனத் தொடங்கும் குறள்.
32. தொடர் – என முடியும் குறள்

**VIII. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளி.** **2x2=4**

33. குற்றியலுகரத்தின் வகைகள் யாவை?
34. வழக்கு எத்தனை வகைப்படும்? அவை யாவை?
35. இலக்கிய வகைச்சொற்கள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
36. வடசொல் என்றால் என்ன? சான்று தருக.

**IX. குறிப்புகளைக் கொண்டு கதைப்பகுதியினை விரித்து எழுதுக. பொருத்தமான தலைப்பு ஒன்று தருக.** **1x3=3**

வயதான தந்தை - நான்கு மகன்கள் - ஒற்றுமை இல்லை - தந்தை கவலைப்படுதல் - அனைவரையும் அழைத்தல் - குச்சிகளை ஒருங்கே கட்டச்செய்தல் - கட்டிலிருந்து தனித்தனியாகப் பிரித்தெடுக்கச் செய்து உடைக்கச் சொல்லுதல் - எளிதாக உடைத்தல் - ஒற்றுமையின் இன்றியமையாமையை வலியுறுத்தல்

**X. ஏதேனும் ஒரு வினாவிற்கு மட்டும் விடையளி.** **1x5=5**

“ஆவணம்” கதையைச் சுருக்கி எழுதுக. **(அல்லது)**

காணாமல் போன மிதிவண்டியைக் கண்டுபிடித்து தருமாறு காவல் துறை ஆய்வாளருக்கு முறையீட்டுக் கடிதம் ஒன்று எழுதுக.

**XI. ஏதேனும் ஒரு வினாவிற்கு கட்டுரை வடிவில் விடையளி.** **1x5=5**

நான் விரும்பும் கவிஞர் **(அல்லது)**

நுகர்வோர் பாதுகாப்பு

- குறிப்புகள் -